விலை ரூபா: 5.00

*Registered as a News paper in Srilanka*

# வலம்புரி
VALAMPURI

சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 11 புதன்கிழமை (26.12.2001) தொலைபேசி 3378 ஒலி 07

மல்லிகா
மிக்சர்
மாளிகை



நறு நறு
மொறு மொறு

காரமான சுவையுடன்
ரேஸ்ற்றி பொம்பே ரிப்பீஸ்
ரேஸ்ற்றி ரைற்றாணிக் காரவடை
ரேஸ்ற்றி மரவள்ளி பீஸ்


இல 149, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.


### பிரதமர் ரணிலின் இந்திய விஜயம்

# புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு பிரதமர் வாஜ்பாய் உடன்படவில்லை?

## அரசியல் ஆய்வாளர்கள் ஆருடம்

(நமது அரசியல் நிருபர்)





தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தைகளை ஐக்கிய தேசியமுன்னணி அரசு முன்னெடுத்து செல்வதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசு நீக்குவதற்கு இந்தியா சம்மதிக்கவில்லை என்ற ஊகங்களின் அடிப்படையில் பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவின் புதுடில்லி விஜயம் கேள்விகுறியாக உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாத இனப் பிரச்சினையை சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் பேசித் தீர்மானிக்கும் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் செய்ததும் அதற்கு மதிப்பளித்து மோதல் தவிர்ப்பு பிரகடனத்தை அரசு வெளியிட்டுள்ளதுடன் இருசாராரும் கடந்த 24 மணித்தியாலங்களாக அமைதியைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானபோது பொறுப்பாக இருந்த தலைவர்களையும், பிரதமர் வாஜ்பாய் உள்துறை

(10ம் பக்கம் பார்க்க)

# ஜெயாவின் ஆதரவாளர்களை ஏமாற்றிய பிரதமர் ரணில்

(சென்னை)

(சென்னை விமான நிலையத்தில் தமிழக முன்னாள்முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அ.இ.அ.தி.மு.க தொண்டர்கள் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வருகையினால் ஏமாற்றம் அடைந்துள்ளனராம்.

தமிழகத்திற்கு வெளியே கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜெயலலிதா சென்றிருந்தார். இந்நிலையில் அவர் எவ்வேளையிலும் சென்னை வரலாம் என்ற எதிர்பார்ப்பில் கட்சித்தொண்டர்கள் காத்திருந்தனர்.

இவ்வேளை விமான நிலைய பாதுகாப்பு மற்றும் வீதிகளின் பாதுகாப்பு திடீரெனகிடுகிடுவென அதிகரிக்கப்பட்டு, படைகள் உசார்படுத்தப்பட்டன பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு படைகள் உசார் அடைவதை அவதானித்த தொண்டர்கள் அம்மாஜெயலலிதா என்ற குஷியில் விமான நிலையத்தில் அவரை வரவேற்க சென்றனர்.

ஆனால் விமான நிலையத்தில் வந்திறங்கியவர் இலங்கை பிரதமர் ரணில்விக்கிரமசிங்க இதனாலேயே பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. அம்மாவருவார் என எதிர் பார்த்தவர்களுக்கு ரணிலின் வருகைபெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. (இ)

# தமிழ்க் குழுவிடம் இருந்து ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சருடன் மகேஸ்வரன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஈ.பி.டி.பி உட்பட சட்டவிரோத ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைவது தொடர்பாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் படவிருப்பதாகவும், ஏனையவர்களிடமிருந்து சட்டவிரோத ஆயுதங்கள் களையப்படும் என்றும் அமைச்சர் ... ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த மாதம் இரண்டாம் திகதி அமைச்சர் மகேஸ்வரன் சந்தித்துப் பேச ...

### கேதீஸ்வர ஆலயத்திற்கு

# கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் செல்வர்

(வவுனியா)

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயப்புனருத்தான வேலைகளில் ஈடுபடுவதற்கு கொழும்புப் பல்கலைகழகத்தில் இருந்து நாற்பதுக்கும் ... வசதியாக ஆலயத்தின் சுற்றாடல், மற்றும் ஆலய உட்பிரதேசம் ஆகியவற்றை துப்பரவு செய்வதற்காக இம்மாணவர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ...

சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் பேசித் தீர்மானிக்கும் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து விடு தலைப் புலிகள் ஒருதலைப்பட்ச டனத்தை அரசு வெளியிட்டுள்ள துடன் இருசாராரும் கடந்த 24 மணித்தியாலங்களாக அமைதியைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்திய ஒப்பந்தம் உருவானபோது பொறுப்பாக இருந்த தலைவர்களை யும், பிரதமர் வாஜ்பாய் உள்துறை

(10ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் குழுவிடம் இருந்து ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சருடன் மகேஸ்வரன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஈ.பி.டி.பி உட்பட சட்டவிரோத ஆயு தக் குழுக்களிடம் இருந்து ஆயுதங் களைக் களைவது தொடர்பாக இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பாதுகாப்பு அமைச் சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பின்போது ஈ.பி.டி.பி அமைப்பினர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் படவிருப்பதாகவும், ஏனையவர்களி டமிருந்து சட்டவிரோத ஆயுதங்கள் களையப்படும் என்றும் அமைச்சர் மகேஸ்வரனிடம் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித் துள்ளார் என அறியப்படுகின்றது.

இதேவேளை புதுடில்லி சென்று கொழும்பு திரும்பி இருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த மாதம் இரண்டாம் திகதி அமைச்சர் மகேஸ்வரன் சந்தித்துப் பேச வுள்ளார்.இப்பேச்சின்போது, சட்ட விரோத ஆயுதக்களைவு, வன்னிக் கான பொருளாதாரத்தடை தொடர் பாக பேசப்படும் என்று தெரிவிக் கப்படுகிறது. (வ)

## கேதீஸ்வர ஆலயத்திற்கு கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் செல்வர்

(வவுனியா)

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயப்புனருத்தான வேலைகளில் ஈடுபடுவதற்கு கொழும்புப் பல்கலை கழகத்தில் இருந்து நூற்றுக்கும் அதிகமான பல்கலைகழ இந்து மாண வர்கள் திருக்கேதீஸ்வரம் வரவுள்ளனர்.

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று பூசைகள் நடைபெறுவதற்கு வசதியாக ஆலயத்தின் சுற்றாடல், மற்றும் ஆலய உட்பிரதேசம் ஆகியவற்றை துப்பரவு செய்வதற்காக இம்மாணவர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் திருக்கேதீஸ்வரம் வரவுள்ளனர். மாணவர்களின் திருக்கேதீஸ்வர வரு கைக்கான ஏற்பாடுகளை இந்து கலாச் சார அமைச்சு செய்து வருவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

## மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இந்த கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று கொழும பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும் அவர் மக்களின் குறைகளை அறிந்து அதனை நிவர்த்தி செய்யும் நடவ டிக்கைகளில் ஈடுபடுவார். (ந)

## பிரதமர் ரணிலின் அந்தரங்கச் செயலராக சரத்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அந்தரங்கச் செயலாளராக சரத் சந்திர சேகரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை பிரதமரின் ஊடகத் தொடர்பாளராக சமன்அத்தாவுட கெட்டி நியமிக்கப்படவிருப்பதாகவும் பிரதமரின் அலுவலகச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (ம)

## பொலீஸ் மாஅதிபராக கொட்டகதெனியா

(கொழும்பு)

பிரதிப்பொலிஸ்மா அதிபர் எம்.ஜி.கொட்டகதெனியா பொலிஸ்மா அதிபராக நியமிக்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

தற்போது பொலிஸ்மாஅதிபராக இருக்கும் லக்கி கொடித்துவக்கு அப்பதவியிலிருந்து நீக்கப்படவிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## வாஜ்பாய்க்கு வயது 77

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் 77வது பிறந்ததினத்தை புதுடில்லியிலுள்ள தனது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் அமைதியான முறையில் கொண்டாடினார்.

இவரது பிறந்த தினத்தை முன்னிட்டு பன்நாட்டுத்தலைவர்கள் தமது வாழ்த்துச் செய்திகளை அனுப்பியுள்ளனர்.

## ஜனவரி 10ம் திகதி

# வன்னிக்கான உணவு-மருந்து பொருட்கள் எடுத்துச் செல்லப்படும்.!

(வவுனியா)

வன்னிக்கான அத்தியாவசிய சில உணவுப்பொருட்களின் தடைநீக்கப்பட்டு தைப்பொங்கல் தினத்துக்கு முன் ஜன வரி 10ம்திகதியளவில் முதலாவது உணவுத் தொகுதி வன்னிக்கு அனுப்பி வைக் கப்படவுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

வன்னிக்கு அனுப்பிவைக்கப்படும் முதலாவது உணவுத்தொகுதியுடன் மருத்துவஉபகரணங்கள், மருந்துந் துவகைகள் என்பனவும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

வன்னிக்கு அனுப்பிவைக்கப் படவிருக்கும் அத்தியவசிய உணவு, மருந்துப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கும் தமிழ் அமைச்சர் ஒருவர் தீவிர முயற்சி எடுத்துவருவதுடன் அந்த அமைச்சரே முதலாவது தொகுதி உணவுமருந்துபொருட்களை வன்னிக்கு வழியனுப்பிவைப்பார் என்றும் சம்பந் தப்பட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (வ)

## ஆஸியில் காட்டுத்தீ வீடுகள் எரிந்து நாசம்

அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீ பரவியதில் பெருமளவு வீடுகள் எரிந்து சாம்பலாகி உள்ளன. கொழுந்து விட்டு எரியும் காட்டு தீயில் இருந்து சுமார் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தீயில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளன.

நத்தார் தினமான நேற்று இத் துயரச் சம்பவம் இடம் பெற்று ள்ளது. காட்டுதீயினை அணைப் பதில் சுமார் ஐயாயிரம்பேர் கொண்ட தீயணைக்கும் படையினர் ஈடுபட்டுள்ளனர். (வ)

## திருமலையில் கடும்மழை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் பெரு மழை காரணமாக சில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திருகோணமலையில் பாலத் தோட்டம், அலஸ்தோட்டம், உப்புவெளி,

(10ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## அறை வாடகைக்கு

யாழ் நகரில் நகைத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்கு உகந்த அறைகள் வாடகைக்கு உண்டு தொடர்பு 1 மணிக்குப்பின் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். (4107)

## சோதிடம்

கைரேகை, ஜாதகக் குறிப்பு, வீட்டுநிலையம், விவாகப் பொருத்தம், நினைத்தகாரியம் பார்ப்பதுடன், வாணி திருமாங்கல்ய சேவையும் நடைபெறுகின்றது. சகல இனமதத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு ஆண், பெண் குறிப்புகள் உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்; தொடர்பு ஞாயிறு தவிர மு.ப 9.00-12.00 மணிவரை வாணி சேதிடம் 237/16. கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம். 22/1 கச்சேரி வீதி நல்லூர் .சோதிடர் சிவக்கண்ணன். (4110)

# எம். ஜி. ஆரின் நினைவு அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழக முன்னாள் முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் நினைவு நிகழ்வுகள் நேற்று முன்தினம் தாவடியிலுள்ள அனைத்துலக எம். ஜி. ஆர், பேரவைத் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் மதிமுகராஜா விஜயகாந் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் எம். ஜி ஆரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் அஞ்சலி உரைகளும் இடம் பெற்றன. (ந)

# கள்வர் கைவரிசை

(அராலி)

வீட்டார் உறக்கத்தில் இருந்தவேளை, திருடர்கள் வீட்டினுள் புகுந்து தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

கடந்த சனியன்று வட்டு: சங்கரத்தைப் பகுதியில் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தின் போது, டெக் மற்றும் பல்லாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தங்க நகைகள் என்பன களவாடப்பட்டிருப்பதாக வீட்டு உரிமையாளர் எஸ். சிதம்பரநாதன் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி தினத்தன்று அயல் வீட்டில் நிறை பெண்களுக்கான துவிச்சக்கர வண்டியொன்றும் திருட்டுப் போயுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-214)

# மழைநீரில் எரிபொருள் நிலையம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்ச்சந்திக்கு அருகாமையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய கட்டடத்தின் கூரை மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதால் தற்போது பெய்துவரும் பெருமழையால் உள்ளேயிருந்து ஊழியர் கடமையாற்றமுடியாமலும் ஆவணங்கள் முதலியவற்றைப் பாதுகாப்பாக வைக்கமுடியாதும் சிரமங்களுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1995ஆம் ஆண்டு இடம்பெயர்வு காலத்தில் சேதமடைந்த மேற்படி கட்டடத்தின் கூரை இதுவரை திருத்தப்படாமை இங்கு குறிப்பிடத்தக்கது. [எ-9]

---

திறனாய்வுக் களம்

# நவீன கற்றல் முறைக்கு கால்கோளாக அமைந்த சரவணபவஐயரின் - 'சிறுபூ' - ஆங்கில நூல்

## மொழியியல் நோக்கில் அமைந்த கண்ணோட்டம்

வ. பரந்தாமன்
விரிவுரையாளர் (ஆங்கிலம்)
ஆங்கில மொழி போதனா நிலையம்
யாழ். பல்கலைக்கழகம்

திரு. எம்சரவணபவஐயரின் [Little Flower] என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆங்கிலக் கவிதைத்தொகுதி பற்றிய சில விமர்சனக் கண்ணோட்டங்களை வலம்புரி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில பெருமகிழ்ச்சி அடைகின்றேன் இக்கவிஞரின் போக்குமற்றைய கவிஞர்களைப் போலல்லாது வேறுஓர் பாணியில் மிளிர்கின்றது திரு சரவணபவ ஐயர் கடந்த இருவருடங்களில் மூன்றுஆங்கிலக்கவிதைத் தொகுதிகளைச் சிறுவர்களிற்காக வழங்கியுள்ளார்; இதுஅவரது மூன்றாவது படைப்பு இலக்கியமாகும். தாம்படித்த அறிந்த விடயங்களை மற்றவர்களுடன் நூல் வடிவில் பகிர்ந்துகொள்ளும் தன்மை கொண்ட நூல் எழுத்தாளர்கள் மிகச்சிலரே இம்மண்ணில் காலூன்றியுள்ளார்கள் சளைக்காமல் தொடர்ந்து நவீன அறிவுத் தேடல்களுக்கு அடுக்கடுக்காக நூல்களை வழங்கி கல்விச் சமூகத்திற்கு ஓர் கலங்கரை விளக்கமாகத் திகழ்பவர்கள் மிகச்சிலரே இக்கூட்டமைப்பில் கவிஞர் சரவணபவ ஐயரும் தனது அங்கத்துவத்தை அச்சாணியாக நிலைநிறுத்தியுள்ளார் என்றால் மிகையாகாது.

ஒவ்வொருவருடமும் புதிதாக ஒன்றைப்படைக்கவேண்டும் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தை மிகையாகக்கொண்டிருக்கும் இவ் எழுத்தாளர் ஆங்கிலக்கவிதைகளிலுள் மாத்திரம்தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் மாணவசமூகத்திற்குபயன்தரகூடிய நூல்களைப் படைப்பதிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார் இதற்கு உதாரணமாக அண்மையில் இவரால் எழுதிவெளியிடப்பட்ட ஆங்கில இலக்கணம் சம்மந்தமான நூலைக் குறிப்பிடலாம். இந்நூல் ஆங்கில இலக்கணத்தின் அடிப்படைத் தன்மைகளைக் கற்றல்வழி முறைகளுக்கு ஏற்றவாறு Pedagogial) சுருக்கமாகவும், எளிமையாகவும் மாணவர்களிற்கு கொடுக்கின்றது மாணவர்கள் மத்தியில் மத்திரமல்ல பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள்கூட இந்நூலின் மூலம் மிக்கபலன் அடைந்துள்ளார்கள்.

### மொழியியலின் கோட்பாடு

இவ்வருடத்தின் அடுத்த வெளியீடாக மலர்கின்றது 'Littlefl wer' இங்கு குறிப்பிடவேண்டிய முக்கியமான விடயம் ஒன்று உள்ளது. கவிஞர் முதற்தடவையாக மொழியியலின் ஓர் கோட்பாட்டுத்தன்மையை மையமாகவைத்துதனது ஆக்கத்தை நெறிப்படுத்தியுள்ளார். அவர் தனது அறிமுக உரையில். ஆங்கிலம் கற்பித்தலுக்கான கற்றல் செய்முறைகள் சிலவற்றை இங்கு பரீட்சார்த்தமாக வெளிப்படுத்தியுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார். மொழியியல் கற்றமாணவன் என்றமுறையில் நான் அவரது தெளிவுப்பாட்டை வரவேற்கின்றேன். ஒலி அமைப்பு ஒரியன்களின் தன்மை மாற்று ஒரியன்கள் தோன்றுவதற்குத் தேவையான அடிப்படைத்தன்மைகள் யாவும் மொழி பேசப்பட்டதன் பின்போ அல்லது ஆக்கங்கள் வெளிவந்ததன் பின்போ கண்டுபிடிக்கப்பட்டவை) மனித கூற்றுக்களை பிய்த்து, ஒட்டி, விலத்தி, ஒன்றுடன் ஒன்று பொருத்தி, நெருக்கிப் பார்த்த இக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்ற கூற்றையாரும் மறுக்க முடியாது ஓர் மொழி கற்பிக்கும் ஆசிரியர் [குறிப்பாக இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் அந்த மொழியின் ஒலியன்களின் கூட்டுத்தொகுதி பற்றியும் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து வைத்திருப்பது தற்கால மொழியியல் நோக்கில் அமைந்தகற்பித்தற் செயற்பாட்டு முறைகளிற்கு எல்லைப்படுத்தி சிறுவர்களிற்கு வழங்கியுள்ளார்.

### நவீன மொழிப்புரட்சி

மொழியியலின் ஒலியமைப்புக் கோட்பாட்டுத் தன்மையைவிட இன்னுமோர் அம்சம் இங்கு காணப்படுகின்றது. சமூக மொழியியலின் அடிப்படையில் நோக்கும் பொழுது திரு.பவான் அவர்களின் படைப்பானது ஓர் நவீன மொழிப் புரட்சி கண்டுள்ளது. கவிஞரினால் ப... மாற்றத்தை விரும்புகின்றார் போலும். (radicalist மாணவர்களிற்கு வழங்கப்படும் அல்லது செலுத்தப்படும் உள் அடைவுகள் (Input அவர்களின் முதல் மொழியினூடாகப் பராமரிக்கப்பட்ட சமூக கலாசார விழுமியங்களுடன் கலவை செய்யப்பட்டு வழங்கப்படும் பொழுது மாணவன் தனது யதார்த்தமான சிந்தனா சக்தியுடன் கற்றலில் ஈடுபடும் தன்மை அதிகரிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தோன்றமுடியும்.

அந்நியாவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது ஆரம்ப காலங்களில் ஒலியன்கள் பற்றிய அறிவுத் தெளிவில்லாமல் சிறுவர்களிற்கான ஆங்கிலப் பாடல்களை திரும்பத்திரும்ப ஒலிக்கச் செய்து ஆசிரியர்கள் தமது மாணவர்களை அவ் மொழிக்குரிய ஒலியன்களிற்கு பரீட்சயப்படுத்தினார்கள் ஆனால் அந்தக் கற்பித்தல் முறை இன்று மாற்றங்களிற்குள்ளாகின்றது. பெரும்பாலான ஆங்கில ஆசிரியர்கள் தற்பொழுது மொழியியல் நோக்கில் அமைந்தபாடத்திட்டங்களை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் பின்பற்றுகின்றார்கள், இவ்வகையான பாடத்திட்டங்களிற் கூடாக பயிற்சியை நிறைவு செய்யும் ஆசிரியர்களின் செயற்பாடானது நவீன மொழியியல் கோட்பாடுகளினூடாக நகர்த்தப்படவேண்டியுள்ளதாக உள்ளது.

### நவீன கற்பித்தலின் அடித்தளம

மேற்குறிப்பிட்ட தன்மையை மையமாகவைத்து திரு. எம். சரவணபவஐயரின் 'Little Flower' பற்றிய சில கருத்துக்களை முன்வைக்கலாம் என எண்ணுகின்றேன். மொழியியல் கோட்பாடுகளை பிரயோகித்து ஓர் நவீன கற்பித்தல் தொழிற்பாட்டிற்கான அடித்தளத்தை முன்வைக்க முயன்றிருக்கும் பாங்கு மிகவும் வரவேற்கப்படத்தக்கதாகும். எல்லாமாக அடக்கப்பட்டுள்ள 42 கவிதைகளில் முதல் 24 கவிதைகளும் ஆங்கிலத்தில் காணப்படுகின்ற 24மெய்ஒலிகளை மையமாகவைத்து (Consonants) எழுதப்பட்டுள்ளன. இக் கவிதைகளைத் தருவதன் மூலம் கவிஞர் ஓர் ஒலியன்களிற்கான ஓர் பரம்பல் அல்லது சிதறல் வியூகத்தை அமைத்துள்ளார். கவிதை சில குறிப்பிட்ட ஒலியன்களினூடாக செலுத்தப்படும்பொழுது தனது இயற்கைத் தன்மையை இழக்கலாம் எனச் சிலர் வாதாடலாம், ஆனால் கவிதை பிறந்தபின்பு அதன் ஒலி அமைப்புக்களை பிய்த்துப் பார்த்து கவிஞரின் ஒலி ஈடுபாடு. மையக்கரு என்பவற்றையும்விமர்சிக்கின்ற தன்மை எம்மிடம இருப்பது கண்கூடு. இங்கு அதற்குரிய மறுதல் காணப்படுகிறது அதாவது கவிஞர் கற்பித்தல் நோக்கில் ஒலியன்களைத் தொகுத்து தனது படைப்பைனைக்குட்படுத்தப்படும் மொழியானது சமூக, கலாசார சமய விழுமியத் தன்மைகளிற்குள் கலவை செய்யப்படுகின்றது. இவ் வகையான மொழிக் கையாள்கை இத் தொகுதியில் மாத்திரமல்ல இவரது முன்னைய கவிதைகளிலும் காணப்படுகின்றது. இவ்வகையான மாற்றமும் சிலநேரங்களில் வரவேற்கப்படலாம். சதா மேற்குலக எழுத்தாளர்களினால், கவிஞர்களினால் எழுதப்பட்ட சிறுவர்களிற்கான ஆங்கிலக் கவிதைகளை வலிய இழுத்து மனனஞ்செய்ய வைத்து அவர்களை ஓர் கற்பனை எல்லைக்கும் அப்பால்வைத்து பயிற்றுவிக்கும் தன்மை இப்பொழுது வரவேற்கப்படுகின்றது.

இவ்வகையான கற்பித்தற் செயற்பாட்டில் கவிஞர் ஓர்

மேற்குறிப்பிட்ட இரண்டு தன்மைகளும்ஆங்கிலமொழிக் கற்பித்தலில் முதலில் பரீட்சார்த்தமாகப் பின்பற்றப்படவேண்டியவையாகும். புதிய கற்பித்தற் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டங்களில் நவீன கோட்பாடுகளை மையமாக வைத்து கற்பித்தலிற்கான படைப்புக்களையும் புதியதோர் வளர்ச்சிப் பாதையில்திருப்பி விடுதல் நல்லதோர் ஆரோக்கியமான முயற்சியாகக் கருதப்படுகின்றது. இம்முயற்சியின் பலனாக இங்கு மலர்ந்திருப்பதே 'Little flower' நூலிற்குள் காணப்படுகின்ற கவிதைகளை தனித்தனியே எடுத்து விமர்சிக்காமல் அவை பிறந்ததற்குரிய கவிஞரின் அடிப்படைச் சிந்தனைகளை மொழியியல் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டுக்கூறியுள்ளேன். இவ் விதமான நவீன பரீட்சார்த்தமான படைப்புக்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிற்கு ஊன்றுகோலாக அமையும் என்றால் அது மிகையாகாது. □

---

# பயணிகள் பஸ் தடம்புரண்டதில் 4பேர்பலி; 35பேர் காயம்

(கொழும்பு)

ஹற்றன், தலவாக்கொல்லை, சில்சியாஸ் நீர்வீழ்ச்சிக்கருகில் பயணிகள் பஸ்ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணம்செய்த நான்குபேர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர். 35பேர்காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விழா ஒன்றில் கலந்துகொள்வதற்காக பஸ்ஸில் பயணம் செய்த போது பள்ளமொன்றில் பஸ்தடம்புரண்டமையால் இவ்விபத்து ஏற்பட்டதாக தலவாக்கொல்லப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவர் பெண் எனவும் காயமடைந்த அனைவரும் கொட்டகல மற்றும் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ.4)

# மோதல்கள் இடம் பெறவில்லை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்ட மோதல் தவிர்ப்பில் இதுவரை எவ்வித மோதல் சம்பவங்களும் இடம்பெறவில்லை என விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனமத மொழி வேறுபாடின்றி அனைவரது பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில் பாதுகாப்புப் பிரிவினர் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வரெனவும் அவ்வறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# வன்னியில் கிளைமோர் தாக்குதல்

(வவுனியா)

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் கிளைமோர்த்தாக்குதல் சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக வன்னித்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டிசுட்டான் நெடுங்கேணி வீதியில் சிறிலங்கா இராணுவம் ஊடுருவித்தாக்குதலை மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர் இச்சம்பவத்தின் போது ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை. [வ]

# பாலன் பிறந்த நாளினை பாவால் தொழுதிடுவோம்

## இறைமகன் பிறந்தாரே!

எந்தையர் மண்ணின் மக்கள்
ஏழைய ரானார் இன்று
வந்ததே வறுமைப் போரும்
வாட்டியே வதைக் கின்றதே
சொந்த மனை மக்களிழந்தார்
சொத்து சுகமனைத்து மிழந்தார்
கந்தைகள் தானே மிச்சம்
கதியின்றிக் கலங்கு இன்றாரே!

ஆண்டுகள் ஈராயிரம் முன்னே
ஆனகுடிக் கணக்கின் நாளில்
மாண்புடை கற்ப மரியுடன்சூசை
மனையிடம் தேடியே யலைந்தனரே
கண்ணியர் என்றிட யாரும்
கருணை உள்ளவர் அங்கேயில்லை
எண்ணியே ஆவின் குடிலேகினர்
ஏழ்மையில் இறைமகன் பிறந்தாரே:

எல்லாம் படைத்தவர் ஏழையானார்
ஆண்டவனே அங்கு அகதியானார்
பொகிலா உலகம் போர்தொடுக்கும்
நல்லோர் வாழ்வைச் சீர்கெடுக்கும்
கல்லாலே மலையையும் நகர்த்திடலாம்
கடுகளவு விசுவாசம் உண்டேல்
சொல்லாலல்ல செயல் புரிவோம்
அல்லற் படுவோர் துயர்களைவோம்

அபிர்ராஜன்

## நந்தார் திருநாளே நீ வருக . ....

இனிய நத்தார் திருநாளே நீ வருக
பகைமை அகன்று சமாதானம்
உதித்திட நத்தார் திருநாளேநீவருக!

யுத்தம் அகன்று சமாதானம்
நிலவ இனிய திருநாளே நீவருக
எங்கள் உள்ளங்களில் உள்ள
துன்பம் நீங்கி இன்பம் தோன்ற
நாங்கள் ஆசையுடன் வரவேற்கும்
நத்தார் திருநாளே நீ வருக!

அல்வாய் கேசவரூபன்

# என்றும் எழிலுடன்வாழ இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

## வலம்புரியே வாழ்க பல்லாண்டு

மணியான செய்திகளை த் தினந் தினந்தந்தாயே
துணிவான செயல்களால் மக்கள் மனங்கவர்ந்தாய்
இரண்டுவயதினில் இவ்வுலகிலேஇடம்பொறித்தாய்
மூன்றாம் ஆண்டதனில் காலடி வைக்கையிலே
ஒவ்வொரு பதிப்பதனில் ஒய்யார நடைபோட்டாய்
உன் வளர்ச்சி கண்டு உளமார வாழ்த்துகின்றோம்
எண்ணிலடங்காப் பல்லாண்டு காலம்
உன்பணியது உயர்வொடு திகழ
இறையருள் வேண்டி இனிது வாழ்த்துகின்றோம்.
வாழ்க! வாழ்க!

சமூகசோதி த. பரராஜசிங்கம்
சமாதான நீதிவான்

காமாட்சியம்பாள்
இந்து பரிபாலன சபை
நீர்வேலி.

## வளமுடன் வலம் வருவாயே!

வளமான எதிர் காலம் நோக்கி
வளர்ந்து வரும் வலம் புரியே
ஈராண்டு காலம் நீ இணையற்ற
சேவை செய்தாயே.

இளையவனாய் நீ இருந்தாலும்
இதமாக செய்திகளை தருகின்றாயே
மூன்றாம் படியிலே ஏறுகின்றாயே
மூலை முடக்கெங்கும் உன்சிறகால் பறப்பாயே!

மக்கட் பணியாற்றும் உன் புகழ்
மலை போல் எங்கும் ஓங்கி வளரட்டுமே
வாழிய நீ-! வளர்க நீ! – வளம் பெறுகநீ

ஓட்டோ சங்கம்
யாழ்ப்பாணம்.

## புகழோங்க வாழ்த்துக்கள்

வானம் பாடியே வலம்புரியே
வண்ணமலராக வரும் வலம்புரியே
புதுப் பொலிவுகண்டு பூரித்தேன்
புத்தாண்டில் புகழோங்க வாழ்த்துக்கள்

வடிவேலு தேவராசன்
புலோலி கிழக்கு;

# உ ரிமைகளை உ றுதிப்படுத்த சிறார்கள் விழிப்புணர்வு ஊர்வலம்

(ஆனைக்கோட்டை)

சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதத்தில் கடந்த ஞாயிறன்று சாவல்கட்டு சிறுவர் கழக சிறுவர்களால் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

மு.ப. 10.00 மணியளவில் சுமார் 150 சிறுவர்கள் சாவல்கட்டு சிறுவர் கழகத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு சாவல்கட்டு சந்தையூடாக தாவடிவடக்கு கொத்திமுலை, உயரப்புலம், ஆனைக்கோட்டை வரை கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

"சிறுவர்களின் உரிமைகளைப் பறிக்காதே, பள்ளிக்கூடம் செல்வதைத் தடுக்காதே. பெற்றோரே! குடித்து எம் உரிமைகளைப் பறிக்காதீர்கள்!' ஆகிய சுலோக அட்டைகளை இவர்கள் தாங்கிச் சென்றனர். (உ-201)

## திருவெம்பாவை நிகழ்ச்சிகள்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை சாவல்கட்டு முருகமூர்த்தி விநாயகர் கோவிலில் திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி நிகழ்ச்சிகள் தினமும் காலை 7.00 மணிக்கு நடைபெறுகின்றது.

★ ★ ★

சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவ கோவிலில் திருவெம்பாவையைமுன்னிட்டு விசேட பூசையும், ஆராதனையும் தினமும் காலை 6.00 மணி முதல் இடம்பெற்று வருகின்றது.

★ ★ ★

ஆனைக்கோட்டை கரைப்பிரான் விநாயகர் கோவிலில் திருவெம்பாவையை முன்னிட்டு திருப்பள்ளிஎழுச்சியும், விசேட பூஜையும் தீபாராதனையும் தினமும் காலை 7.00மணிமுதல் இடம்பெற்று வருகின்றது. (உ - 201)

★ ★ ★

(அராலி)

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசாமி கோயிலில் தினமும் அதிகாலை 6.00 மணிக்கு திருவெம்பாவை பூஜையும். திருவெம்பாவை ஓதலும் இடம்பெற்று வருகின்றது:

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விசேட திருவெம்பாவைப் பூஜையும் திருவூஞ்சலும் நடைபெறவுள்ளது. (உ-214)

★ ★ ★

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்கள், நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தைச் சூழவுள்ள திருவீதிகளில் அதிகாலை வேளையில் திருவெம்பாவை திருப்பாவை பாடல்களை மணி ஓசைகள் சங்கொலிகளுடன் நிகழ்த்தி வருகின்றனர். (உ-120)

## அதிருப்தி நிலையில் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிஅரச கேசரிப் பிள்ளையார் ஆலயமுகப்பு பகுதியிலிருந்துவடக்காகவும்,தெற்காகவும் செல்லும்பிரதான ஒழுங்கைகள் கற்கள்பறிக்கப்பட்டுநீண்ட நாட்களாகியும் இதுவரையில் இந்த ஒழுங்கைகள்திருத்தம்செய்யப்படாதது குறித்து அப்பகுதிமக்கள்பலத்தஅதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பெருமளவு பயணிகள்இந்த ஒழுங்கைகளால் பயணம்செய்வதால் அவர்கள் பெரிதும் சிரமம் அனுபவித்துவருவதாகவும்,வாகனங்கள் பயணம் செய்ய முடியாதுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது; (க)

## மதகுகளில் தடங்கல் வெள்ள நீர் தேக்கம்

[யாழ்ப்பாணம்]

பருவ மழை தொடர்ந்தும் பெய்து வரும் நிலையில் குடாநாட்டிலுள்ள பல்வேறு மதகுகளின் கீழும் நீர் தேங்கியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

ஊர்வாரி வெள்ளம் வழிந்தோடும் மதகுகளில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதனாலேயே இவ்வாறு நீர் தேங்கி நிற்பதாகவும், மீளவும் ஊருக்குள் மீட்கும் நிலை காணப்படுவதாகவும்தெரிவிக்கப்படுகிறது:

இதே வேளை, தமது பாதுகாப்புக் கருதி மதகுகளில் படையினரே தடங்கல்களை போட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது?

இவ்வாறு நீர் தேங்கி நிற்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய தொற்று நோய் அபாயம் பற்றி சுகாதாரத்துறையினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-10)

## நத்தார் குடிலை அலங்கரித்த மாணவன் மின்தாக்கி மரணம்

(சுண்டுக்குளி)

வீட்டில் அமைத்த நத்தார் குடிலுக்கு மின்னிணைப்பு வழங்கிய மாணவன், மின்தாக்கியதில் அந்த விடத்திலேயே மரணமான சம்பவம் கடந்த திங்களன்று இடம் பெற்றுள்ளது.

இடம் பெற்றுவரும் க. பொ. த. சா/த பரீட்சைக்குத் தோற்றும், ஒடக்கரை வீதி கரையூரைச் சேர்ந்த இ; றோபேட் (வயது 16) என்ற சென் சாள்ஸ் மகா வித்தியாலய மாணவனே இவ்வாறு பரிதாபகரமான மரணத்தைத் தழுவியுள்ளார்:

பெற்றோர் நத்தார் தின நள்ளிரவு ஆராதனைக்குச் சென்று விட்டதால் சகோதரன் மட்டும் இவருடன் இச்சம்பவம் நடைபெற்ற போது வீட்டில் நின்றதாக தெரிய வந்துள்ளது. (உ-110)



# விளையாட்டு செய்திகள்



## சுசந்திகாமீது தாக்குதல் விளையாட்டு அமைச்சு விசாரணைக்கு உத்தரவு

இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க விளையாட்டு அமைச்சு மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதுஇன்னொருசகவீரரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முழுமையான விசாரணைக்குவிளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவத்தினால் மனமுடைந்து போயுள்ளசுசந்திகா தான் விளையாட்டு துறையிலிருந்து விலகப்போவதாகவும் கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தொடர்பாக சுசந்திகா பத்திரிகையாளர்களுக்கு விசேட பேட்டி ஒன்றை அளித்துள்ளார்.

அதில், மேலை நாடுகளில் போட்டி தான் இருக்கும் ஆனால் பொறாமை இருக்காது. அதனால் தான் அந்நாடுகளில் விளையாட்டுத் துறை பெரும்வளர்ச்சியடைந்துள்ளது.

ஆனால் இலங்கையில் எதிர்மாறாகவேநிலைமைஉள்ளது, சர்வதேசரீதியில் இலங்கைக்கு புகழ் தேடிக்கொடுத்த வீரர், வீராங்கனைகள் தாக்கப்படுவது இது முதல் தடவையல்ல இதற்கு முன் ஓட்டவீரர் சுகத் திலகரட்ண, தடை தாண்டல் ஓட்ட வீராங்கனை சிறியாணி குலவன்ச ஆகியவர்களும் தாக்கப்பட்டதை சுட்டிக் காட்டிய சுசந்திகா இவ்வாறான செயற்பாடுகளுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும்,

தன் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீதும் அதற்குப் பின்னணியாக இருந்தவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் இல்லா விட்டால் விளையாட்டுத்துறையில் இருந்து நிரந்தரமாக விலகும் தனது முடிவில் மாற்றம் ஏற்படாது என்றும் மனவேதனையுடன் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் பெற்றுக் கொடுத்து உலகப் புகழ் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

## இறுதி போட்டி

ஸ்பானிஸ் மாஸ்டர் டென்னிஸ் சம்பியன் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் பாசிலோனாவில் நடை பெற்றன.

ஆண்கள் தரப்பில் காலித் அலோயா தன்னை எதிர்த்தாடிய டெனி ரெப்பினேயோவை 7-6, 7-6என்றசெட்கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்;

பெண்கள் தரப்பில் அனோய் டிபல் மடோனா தன்னை எதிர்த்தாடிய மார்க்கா மரோனோவை 6-2, 6-7, 6-4 என்ற செற் கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்; (உ-2)

# இலங்கையரசு விடுதலைப் புலிகளுடன் பேசுவது இந்தியாவின் நலனுக்கு ஒவ்வாத விடயம்

## சமாதான முயற்சிக்கு தடைபோடப் பார்க்கிறார் சுவாமி

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை வைத்துக் கொள்ளவோ அவர்கள் மீதான தடைகளை நீக்கவோ இலங்கை அரசாங்கம் முயலக் கூடாது.

இது இந்தியாவின் நலனுக்கும், ஆசியப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் ஒவ்வாத விடயம்.

இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி இந்தியா சென்ற வேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம்வேண்டுகோள் விடுத்திருப்பதாய் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் உலகின் முக்கிய பல நாடுகளாலும் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கம்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அவர்களின் உளவுப் பிரிவின் பொறுப்பாளர் பொட்டு அம்மானும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் எனவும் சுவாமி சுட்டிக்காட்டி தனது கருத்தை வலியுறுத்தியதாக அறியப்படுகிறது,

இதேவேளை,

இலங்கைத் தமிழர் விடயத்தில் ஒரு நிலையானதும் சிறந்ததுமான கொள்கையைக் கடைப்பிடிக்காத சுப்பிரமணியம் சுவாமி இவ்வாறு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் வேளைகளில் குழப்பியடிக்கும் விதமான கருத்துக்களைக் கூறி புலிகளின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 35 பாடசாலைகள் முற்றாகச் சேதம்

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக 35 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் 8 கோடியே 47 இலட்சத்து 3 ஆயிரத்து 999 ரூபா பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன,

கரைச்சிக் கோட்டத்தில் 18 பாடசாலைகளும், பூநகரி கோட்டத்தில் 14 பாடசாலைகளும் கண்டாவளை கோட்டத்தில் 3 பாடசாலைகளும் இவ்வாறு முற்றாக அழிந்துள்ளன. (உ)

## அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் அதிவேகமாக செல்கின்றனவாம்

### பொதுமக்கள் கவலை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் வீதிகளில் அதிகரித்த வேகத்தில்செலுத்தப்படுவதுகுறித்து பொதுமக்கள் மத்தியில் கவலையுடன் பேசப்பட்டு வருகின்றது.

இந்நிறுவனங்களின் வாகனங்கள் பொது மக்கள் அதிகமாக நடமாடித்திரிகின்றவீதிகளில் தமது வேகங்களைக் குறைக்காமல் செலுத்தப்படுவதால் பல்வேறு அசெளகரியங்களைப் பொதுமக்கள் எதிர் நோக்கவேண்டியுள்ளது. (உ-77)

## யாழ். நீதிவான் நீதிமன்றிற்கு எழுதுவினைஞர்களாக அறுவர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நீதிவான் நீதிமன்றுக்கு புதிதாக ஆறு எழுதுவினைஞர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த காலங்களில் நீதிமன்றில் நிலவிய ஆளணி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் தமது கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ளனர்.

மேலும், யாழ். நீதிமன்றம் தனியார் வீடு ஒன்றிலே இயங்கி வருவதால் பெரும் இடநெருக்கடியினை எதிர்கொள்வதுடன் ஊழியர் தமது கடமையினை மேற்கொள்ளும் போது பெரும் அசெளகரியங்களை எதிர் நோக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை, நீதிமன்றை பழைய இடத்தில் கட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அதனை நடைமுறைப்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## யுவதிகள் தும்புக் கைத்தொழில் பயிற்சி பெறுவதற்கு வசதி

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் கல்வி கற்று மேலும் கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ள யுவதிகளுக்காக வடக்கு கிழக்கு மாகாண பொலிஸ் திணைக்களம் இலவச தும்புக் கைத்தொழில் பயிற்சியை வழங்க முன்வந்துள்ளது.

இத் தும்புக் கைத் தொழில் பயிற்சியை பெற விரும்புவோர்விண்ணப்பங்களை தமது கிராம சேவை அலுவலரிடமோ அல்லது உடுவில் தெற்கு பிரதேச செயலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ள இக்கைத் தொழில் பயிற்சிக்கு ஊக்குவிப்புத் தொகை கொடுக்கப்படும் என்றும் முதலாவது பயிற்சி வலிகாமம் தெற்கில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கள்ளச் சந்தையில் கலப்பட மண்ணெய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் தரமற்ற மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதாக பாவனையாளர் மத்தியில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் எரிபொருட் தட்டுப்பாட்டை சாக்காகக் கொண்டு கள்ளச் சந்தைகளில் இவ்வாறு கலப்படமான மண்ணெண்ணெய் விற்பனையாவதாகவும்,

கூடிய விலைகொடுத்தும் இவ்வாறான மண்ணெண்ணெயைபெறுவதில் தாம பல சிரமங்களுக்கு ஆளாவதாகவும் பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## அ. அட்டை கண்டெடுப்பு

றூபாதேவி ஜெபநேசன் (பாரதி வீதி, நயன்மார் கட்டு) என்பவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி', காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்தில் வந்து அடையாள அட்டையைப்பெற்றுக் கொள்ளலாம்.

## இராசிபலன்

26 - 12 - 2001
(மார்கழி 11 புதன்)
ஏகாதசி மாலை 6 17 வரை
பரணி பி.இ 1.36 வரை
ராகுகாலம 12 27-1:57
நல்ல நேரம்-4 57-6 27
சித்த மிர்தம்

**மேடம்**
ஐஸ்வரியம், காரிய அனுகூலம், நிலைமாற்றம், சொத்துக்களால் நன்மை.

**இடபம்**
சயனசுகக் குறைவு, காரிய தாமதம, சுபகாரியம் செலவு, குடும்ப நன்மை.

**மிதுனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, பொருள் சேர்க்கை, தெய்வ சிந்தை.

**கடகம்**
முயற்சி கைகூடும், தொழில் சிறப்பு, நிர்வாகம், பிரயாணம்.

**சிங்கம்**
கட்டுப்பாடு, புதிய தொழில் சிந்தை, காரியதாமதம், தர்மம்.

**கன்னி**
பிரயாண பயம், நண்பர்கள் வெறுப்பு, காரிய தடங்கல், உடல் வியாதி.

**துலாம்**
களஸ்திர சுகம், காரிய அனுகூலம், தனலாபம், திடீர் பயணம்.

**விருட்சிகம்**
செய் தொழில் விருத்தி, முயற்சி நிறைவேறும், ஆரோக்கியம் வீண்வார்த்தை

**தனுசு**
தொழில் மந்தம், காரிய தாமதம், குடும்பக் கவலை, சகோதரர், உதவி.

**மகரம்**
உடல் நலக் குறைவு, முயற்சி தாமதம், வாக்குப் பகை, தாய்வழி உறவு.

**கும்பம்**
காரிய அனுகூலம், தனவரவு, குடும்ப நன்மை, பிரயாணம்.

**மீனம்**
தொழில் நன்மை, வீண் விவாதம், முயற்சி தாமதம், தனவிரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மீளக்குடியமர்ந்த மக்களின் வீடுகளைத் திருத்தியமைக்க நிதியுதவிஏதும் இல்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அரியாலையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுடைய சேதமடைந்த வீடுகளைத் திருத்தம் செய்வதற்கு அரசினால் இதுவரை நிதியுதவி எதுவும் வழங்கப்படவில்லை என மீளக்குடியமர்ந்தவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக 2ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (உ-77)

## சங்கே முழங்கு

### மண்ணெய் விநியோகம்; தென்மராட்சி கிழக்கு கூ. சங்கம் விளக்கம்

எமது சங்கத்திற்கு 27-10-2001 இன் பின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 10-12-2001 வரையும் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை.

நாம் 30-10-2001 அன்று 6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணைக்கான கொள்வனவுக் கட்டளையை அனுப்பியிருந்தும் 10-12-2001 அன்று 3 ஆயிரத்து 300 லீற்றர் மண்ணெண்ணை தான் வழங்கப்பட்டது.

எமக்கு குறைந்த பட்சம் ஒரு கிழமைக்கு 6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணை தேவையாகும். நாம் ஒவ்வொரு விநியோகத்தின் பின்னரும் கொள்வனவுக் கட்டளையும் அதற்கான காசோலையும் அனுப்பி வைத்தும் மண்ணெண்ணை வழங்காது சங்கங்களின் அசமந்தப் போக்கு என்று எம் மீது குற்றம் சுமத்துவது மக்கள் மத்தியில் எமக்கு அவப்பெயரை ஏற்படுத்தவேண்டுமென்றே செய்யப்பட்ட பிரசாரம் ஆகும்

யாழ். குடாநாடு முழுவதும் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது ப. நோ. கூ. சங்கங்களின் அசமந்தப் போக்காக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொ. கனகராசா
தலைவர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்
கொடிகாமம்.

## மத்திய வங்கி நியமனங்களில் உயரதிகாரிகள் குளறுபடி

### கணக்காய்வாளர் நாயகத்திற்குமுறைப்பாடு

(கொழும்பு)

மத்திய வங்கி ஆளுநர் மற்றும் பல உயரதிகாரிகள் வங்கியின் ஆட்சேர்ப்பு விதிமுறைகளையும் மீறி தங்கள் குடும்பத்தவர்களை நிறைவேற்று அதிகாரிகளாக வங்கியில் சேர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது;

மத்திய வங்கியில் இடம் பெற்ற கணக்காய்வுஅறிக்கைகள் இதனைச் சுட்டிக்காட்டுவதாகக் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வங்கியின் நிறைவேற்றுஅதிகாரிகள் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் விதிமுறைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு 42பேர் பின் கதவுகள் ஊடாக இப் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளதுடன்,

தங்கள் பிள்ளைகளை இப் பதவிகளில் அமர்த்துவதற்காக இவர்கள் ஆட்சேர்ப்பு விதிமுறைகளை தங்கள்விருப்பப்படி மாற்றியமைத்துள்ளதால்,

மேற்படி பதவிகளுக்கான எழுத்துமூலப் பரீட்சையில் நல்லபெறுபேற்றைக் காட்டியவர்கள் புறக்கணிக்கப்பட்டு அதிகாரிகளின் பிள்ளைகள் இப்பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; (உ)

## அமெரிக்கா நோக்கிச் சென்ற விமானத்தை தாக்க முனைந்தவர் இலங்கையர்

# என்ற செய்தியால் அரசு அதிர்ச்சி

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரான்ஸ்தலைநகர் பாரிஸிலிருந்து அமெரிக்காவின் மியாமிநகருக்குச்சென்றுகொண்டிருந்த விமானத்தைத் தாக்க முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நபர் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து இலங்கை அரசு மிகுந்த அதிர்ச்சி கொண்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

றிச்சாட் ரெய்ட் என்று அறியப்பட்ட இந்தநபர் 1973 ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்தவர்என்றும் தாரிக்ராஜா என்ற பெயருடைய இவருக்கு அப்துல் றஹிம் என்ற பெயரும் உண்டு என்றும் இவர் ஒரு முஸ்லிம் என்றும் பிரெஞ் பொலிஸாரும் அமெரிக்க புலனாய்வுப்பிரிவினரும்கூறியிருப்பதை அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தோம்.

அரசு இவ்விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்படுவதுடன் இதனை பாரதூரமான விடயமாகக் கருதி பிரான்ஸ் மற்றும் அமெரிக்க நாடுகளிடம் இது குறித்த மேலதிக விபரங்களைக் கேட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இலங்கையில் பெருமளவு முஸ்லிம்கள் வாழ்கின்ற போதிலும் தற்கொலைத் குண்டுத்தாக்குதல்களை நடத்தக்கூடிய அளவுக்கு தீவிரவாதம் மிக்கவர்களாக அவர்கள் இந்நாட்டில் உணரப்படவில்லை என்பதனையும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## சைவ மக்களின் மனக்குறையை போக்க

# அமைச்சர் மகேஸ்வரனை நாடுகிறார் சிவமகாராசா

## நிலைமையை விளக்கி நீண்ட கடிதம்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சரான தாங்கள்மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்கு விஜயம் செய்து ஆலயதிருத்த வேலைகளை மேற்கொள்ளவும் சைவமக்கள் ஆலயத்திற்கு சென்று வழிபாடு மேற்கொள்ள வழிவகைகள் மேற்கொண்டமையை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

அதுபோல வட பகுதியில் சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை சிவன் கோவில்களையும சைவ மக்கள் சென்று வழிபடவும் நித்திய பூசைகள் முறைப்படி நடைபெறவும் உள்ள தடைகள் நீக்கப்பட தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றினை கடந்ததிங்களன்று முன்னாள பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமகாராசா இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

பிரசித்திபெற்றபுனித தலங்களான மாவிட்டபுரம் கீரிமலை ஆகியதலங்கள் உட்பட்ட வலிகாமம் வடக்குபிரதேசம் மக்கள் மீளக் குடியமர வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மக்கள் மீளக்குடியமராமல் கோவில் பூசை வழிபாடுகள் ஒழுங்காகவும், கிரமமாகவும் நடைபெறமுடியாது

இதற்கான நடவடிக்கைகளை தாங்கள்மேற்கொண்டு கூடிய விரைவில் சைவ மக்களின நீண்டகாலமாக உள்ள மனக்குறையைத் தீர்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமன்றி மாவிட்டபுரம கந்தசுவாமி கோவில், கீரிமலை சிவன்கோவில் திருத்த வேலைகள் போதிய நிதி ஒதுக்கப் படாமையால் பூர்த்தியடையாத நிலையில் இருக்கின்றன. இதற்கு தேவையான நிதியை ஒதுக்கிக் கொடுத்து புனருத்தாரண பணிகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு கும்பாபிஷேகம விரைவில் நடைபெற ஆவன செய்யவேண்டும்.

கீரிமலை சைவமக்கள் தமது இறந்தவர்களின் இறுதிக் கடன்களைநிறைவேற்றி வருவது வழக்கம் அந்தக் கருமமும் செய்ய மக்கள் தடையின்றிச் செல்ல வழிவகைஏற்படுத்தித் தரவேண்டும்

மாவிட்டபுரம், கீரிமலை ஆகிப தலங்களுக்கு மக்கள் தடையின்றி தினம் தோறும் செல்ல வசதியாக போக்குவரத்துச் சேவை நடத்தப்பட வேண்டும்.

வலிகாமம் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து உதவ வேண்டுமென்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (உ)

## நிர்வாக சபை தெரிவு

(அராலி)

கூட்டுறவு ஊழியர்களின் தொழிற்சங்க சங்கானைக் கிளையின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த சனியன்று இடம் பெற்றது.

தலைவராக க. விக்னேஸ்வரன், செயலராக ஆ. சுந்தரவதனி ஆகியோரும அத்துடன் நிர்வாக உறுப்பினர்களாக ஐவரும் நியமிக்கப்பட்டனர். (உ-214)

## புதிதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் காவலூருக்கு நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்மாவட்ட அலுவலகம் இளைஞர்சேவை உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வரை இளைஞர் சேவை அதிகாரியாகக் கடமையாற்றியவர் பதவிவிலகியதை அடுத்து ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் மேற்படி பதவி வெற்றிடமாக இருந்துவந்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தற்பொழுது சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இளைஞர்சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் செல்வி வி. வினோதினி என்பவரே இப்பிரதேசத்திற்கு பதில் கடமை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 12 இளைஞர் கழகங்கள் இயங்கிவருகின்றன. (உ-75)

## வாழ்த்துச் செய்தி

துன்பம் பல கண்டாய், துயரம் பல கொண்டாய், ஆனால் எதைக் கண்டும் நீ துவண்டு விடவில்லை. துன்பத்தின் மத்தியிலும் துணிந்து நின்றே வளர்ந்தாய். இழப்புக்கள் இயற்கையே. இதைக் கண்டு நீ கலங்காதே வரவுகளை மகிழ்வோடு ஏற்றுக்கொள் அதுவே உன் வெற்றிக்கு தனி அரண். சில இழப்புக்கள் எம்மை பாதிக்காவிடினு பல இழப்புகள் எம்மை குப்புற வீழ்த்தி மேல் ஏறி நின்று நையாண்டி செய்கின்றன.

தோல்விகள் வரட்டும் பரவாயில்லை, முயற்சியைப் பார்த்து யாராயினும கேலி செய்யட்டும் கவலையில்லை. நம்முயற்சி, நமக்கு வெற்றி என்ற குறிக்கோளுடன் மக்கள் வலம்புரி வலம் வரட்டும் நினைத்துப் பார்க்க முடியாத வெற்றியினைப் பெற்று வளர்ந்து வரும் வலம்புரியே, சுதேச நலன்களையும், சுதேச சமய கலாசாரம், அரசியல் ஸ்திரம், பொருளாதார தன்னிறைவு என்பவற்றை வலுப்படுத்த சுதேச நலன்களில் அக்கறை கொண்டு நியாயத்தின் பக்கம் நின்று பக்கம் சாராமல், நடுநிலைமையுடன் செயற்பட இந்த 2ஆம் ஆண்டுநிறைவில் இறைஅன்புடன் என்றும் சிறந்து வாழிஎன வாழ்த்தி மகிழ்வதில்பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தலைவர்

எஸ். வி. ஆறுமுகசாமி (ஜே. பி)
விநாயகர் சமூக சேவை
கொக்குவில் கிழக்கு

## வடக்கு கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலராக சண்முகலிங்கம் நியமனம்

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக க. சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள க. சண்முகலிங்கம் வடக்கு கிழக்கு மாகாணசபையின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு காணி மற்றும் விவசாய அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகப் பணிபுரிந்துள்ளார்: வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்குமுன் இந்து சமய விவகாரத்திணைக் களத்தின் பணிப்பாளராக இவர் பணியாற்றியுள்ளார். (வ)

### கூட்டணி அலுவலகம். மீது கிரனைட் வீச்சு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நெல்லியடி அலுவலகம் மீது கடந்த சனிக்கிழமை இரவு 8-30 மணியளவில் இனந்தெரியாதோரால் கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையாயினும் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது, (இ-43)

# தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ நீதியான நிரந்தரத் தீர்வு தேவை

## இந்து குருமார் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது அமைச்சர்களுக்கும் தமது வாழ்த்துக்களையும் ஆசியையும்தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகஒன்றியம் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவிற்கு ஆசிச்செய்தி அடங்கிய கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

இலங்காபுரியின புதிய பிரதம மந்திரியும் அவரது அமைச்சரவையும் ஆட்சிப பொறுப்பை ஏற்றிருக்கும் இவ்வேளையிலேயே இலங்கையில் இயங்கிவரும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் இருந்து அனைத்து இந்துக்களின் சார்பாகவும் குறிப்பாக இந்துமத குருமாரின் சார்பிலும் மங்கள கரமான நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது.

நெருக்கடி மிகுந்த இந்தச் சூழலில் ஆட்சிப் பீடம் ஏறியிருக்கும் தாங்கள் தங்கள் அன்பும் பண்பும் மிக்க ஆட்சிசெல மையாலும் மதியூகத்தினாலும் நன்முயற்சியாலும்இந்த நாடு எதிர்நோக்கியிருக்கின்ற சகல பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வுகண்டு சுபீட்சம் மிக்க ஒரு புதுவாழ்வைச் சகலஇனமக்களுக்கும் வழங்கி உலகமக்கள் மததியில் பெரும் புகழைப் பெறுவதோடு சமாதானத்துக்கான நோபல் பரிசையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றுஎல்லாம்வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தனை செய்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

பல மொழி பேசுவோரும் பல மதங்களைச் சார்ந்தவர்களும் பல இனத்தவர்களும் சேர்ந்து வாழ்கின்ற இந்தஇலங்காபுரியிலே அருள்மிகுந்த பல தெய்வத்தலங்களும் ஆற்றல் மிகுந்த சமயப் பெரியார்களும் வரலாற்றுப் பெருமையும் உடைய இந்த நாட்டிலே துரதிர்ஷ்டவசமாக யுத்தம் என்னும் பெருந்துன்பம் சகலருக்கும் வேதனை தருவதாக உள்ளது. சமாதானமுமே இப்போது அனைத்து மக்களின் முக்கிய தேவையாக உள்ளது.

இப்போது இருதரப்பாலும் வைக்கப்பட்டுளயுத்த நிறுத்தம் மோதல் தவிர்ப்பு ஆகியவற்றை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள்

இந்தச்சந்தர்ப்பத்தைநன்கு பயன்படுத்தி நிரந்தர சமாதானம் ஏற்படவும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய நீதியான நிரந்தரத்தீர்வொன்று கிட்டவும் வகை செய்துசெல்வவளமும்தெய்வ அருளும்செங்கோல் ஆட்சியும் நிலவும் சுபிட்சம் மிக்க நாடாக இலங்கை திகழவும் உங்கள் ஆட்சியின் பெருமை பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்து ஆசிகூறி அமைகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது(இ)

# இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே பாலம் அமைக்க

## வாஜ்பாய், ரணில் முடிவு

(கொழும்பு)

இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்குமிடையே பாலம் அமைப்பது குறித்து இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தபோது இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும். இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்குமிடையே போக்குவரத்து வசதி கருதி இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் இவ்விடயம் குறித்து அடுத்தமாதம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கைப் பிரதமர் நாடு திரும்பிய பின் இந்தியப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கைப் பிரதமருக்கும் எமக்குமிடையே பொருளாதார நட்புறவு குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

600 கிலோ வோல்ற்ஸ் வலுவுள்ளவாயு மின்உற்பத்தி நிலையத்தை நிறுவ இலங்கைக்கு இந்தியா உதவி செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# உதவித்தேர்தல் ஆணையாளர்களுக்குப் பணிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான முன்னேற்பாடுகளில் ஈடுபடுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா சகல மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர்களையும் பணித்துள்ளார்

நடந்து முடிந்த தேர்தல் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் வாக்காளர்களைப் பதிவு செய்யுமாறு வடக்குக் கிழக்கு உள்ளிட்ட சகல மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்களையும் அவர் பணித்துள்ளார்.

14மாநகர சபைகள் 37 நகர சபைகள் மற்றும் 258 பிரதேசசபைகளைத் தெரிவு செய்யும் வகையில் இத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இதே வேளை புதிய ஆண்டு மார்ச்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# ஒன்பது மாதங்களில் 81 பேர் காலிழப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் வரை மிதிவெடி விபத்து காரணமாக 81பேர் கால்களை இழந்துள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது;

இத்தொகையில் செப்ரெம்பர்மாதத்தில் மட்டும்17பேர் கால்களை இழந்துள்ளனர்,

மிதிவெடி விபத்துக்காரணமாக கால்களை இழந்தவர்களில் பெரும் பான்மையினர் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இங்குகுறிப்பிடத்தக்கது. (உ-77)

# வடக்கு கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு

## ஜெயலத் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்புற்று, பொதுவிடங்களில் தஞ்சமடைந்துள்ள பொதுமக்களுக்கு, 3நாட்களுக்குசமைத்த உணவையும் ஒரு வாரத்திற்கு வேண்டிய உலர் உணவையும் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அரச அதிபர்களுக்கு புனர்வாழ்வு மீள்குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா பணித்துள்ளார்.

இவர்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை உடன் தனக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் அரச அதிபர்களைக் கோரியுள்ளார். (உ)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு; அதிகாரிகளை சந்திப்போம்

## இரா சம்பந்தன் பா. உ.

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக அரச உயர் அதிகாரிகளை தாம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தமிழ்க் கூட்டமைப்பினர் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோருடன் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது உட்பட மற்றும்பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராய இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# திருக்கேதீஸ்வர ஆலயம்; இராணுவம் வெளியேறியது

## அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

திருக்கேதீஸ்வரம் சிவன் கோயில் சுற்றாடலில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரை அவ்விடத்தைவிட்டு அகற்றிவிட்டதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தஆலயத்தின் புனருத்தாரண திருப்பணிக்கு ஒதுக்கப்பட்ட50இலட்சம் ரூபாவில் 15இலட்சம்ரூபாவிற்கான காசோலை அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# தமிழ் வகுப்பு ஜனவரி முதல் வண்ணையில்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகாரணமாக நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்நடைபெற்றுவரும்,நாவலர் தர்மகர்த்தா சபையினால் நடத்தப்படும் சமஸ்கிருத மற்றும் தமிழ் வகுப்புக்கள் புதிய ஆண்டு தொடக்கம் வண்ணார்பண்ணை நாவலர்மகா வித்தியாலயத்தில் நடைபெறும்எனவும்.

இவ்வகுப்பை அடுத்தவருட ஏப்ரல் மாதம்வரை நடாத்த திட்டமிட்டிருப்பதாகவும் சைவபரிபாலன சபை வட்டாரங்கள் தெரிவித்தன (உ-9)

---

உறங்குகின்ற ..

செங்கை ஆழியான்) வெளியீட்டுரை ஆற்றுகையில்;

தமிழ்உலகிற்குஇப்படியான படைப்புக்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளிவருவது அவசியமான ஒன்றாகும்.

ஈழத்து அனைத்து சிறுகதை எழுத்தாளர்களையும் பிரதேச வேறுபடின்றி சமூகத்திற்கு அறிமுகமாக்கிய தனிச்சிறப்பு 'சுதந்திரன்' பத்திரிகைக்கே இருக்கிறது.

தேவிபரமலிங்கத்தின் முதல் சிறுகதையான 'வடு' வும் சுதந்திரனில் வெளிவந்தது. இந்நூலாசிரியர் குடத்துள விளக்காக இருந்து பல்வேறு புனை பெயர்களில் எழுதி வந்துள்ளார்.

ஆனால் பல்வேறு புனை பெயர்களில் எழுதுவதால் அவர்களின் ஆக்கங்கள் ஒருங்கிணைந்த மதிப்பீட்டிற்குஉட்படாமல் இருந்து விடுவதாகவே நான் கருதுகிறேன்.

சிறந்த பல படைப்பாளிகள் இன்று சமூகத்தில் இருந்தாலும் கூட அவர்களின் படைப்புகள் நூலுருவாகும் போது மட்டுமே விமர்சகர்களின் பார்வையையும் சமூக அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்கின்றன என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பேசுகையில்;

தேவி பரமலிங்கம் மூன்று தசாப்த காலமாக எழுதி வந்தாலும் அவரின் படைப்புகள் ஆவணப்படுத்த முடியாத நிலை இருந்தது;

இன்று அவர்தான் வாழ்ந்த காலச் சமூகத்தின் முற்போக்குக் கால கட்டத்தில் எழுதிய நாவலை வெளியிடுவது நல்ல முயற்சியாகும்.

ஒரு கலைஞனை வாழும் காலத்தில் நாம் மதிக்கவேண்டும். அப்போதே அவனின் கலை விழுமியங்களை கௌரவிக்க முடியும் என்றார்.

# இலக்கிய வட்ட ஏற்பாட்டில் ஒரே மேடையில் 11 நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டம், அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரே தடவையில் 11 நூல்களை வெளியிடவுள்ளது.

'சுதந்திரன்' பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பாக ஒரு நூலும். யாழ். இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த பத்து எழுத்தாளர்களின் நூல்களுமே இவ்வாறு ஒரேமேடையில வைத்து வெளியிடப்பட இருப்பதாக யாழ். இலக்கிய வட்டத் தலைவரும் சங்கானை பிரதேச செயலரும் பிரபல சிறுகதை நாவல் எழுத்தாளருமான கலாநிதி க. குணராசா தெரிவித்தார்.

முன்னைய வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சர் ஒதுக்கிய 8லட்சம் ரூபா நிதியிலிருந்தே இந்நூல்கள் வெளியிடப்படவுள்ளன'

இந்த நிதியில் இரண்டரை இலட்சம் ரூபா சுதந்திரன் சிறுகதைத் தொகுப்புக்கும், மூன்று இலட்சம் ரூபா இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் வெளிவராத நூல்களை அச்சிடுவதற்கும் இரண்டரை இலட்சம் ரூபா எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்வதற்கும் ஒதுக்கப்பட்டதாக குணராசா மேலும் தெரிவித்தார்.

வெளியிடப்படவுள்ள இந்நூல்கள் யாவும் தற்போது யாழ்ப்பாணத்தில் அச்சாகிக் கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-106)

# தேடப்படும் புதல்வர்களை பொலிஸில் ஒப்படைக்க அனுருத்த உறுதிமொழி

(கொழும்பு)

மடவளை உடத்தலவின்ன படுகொலைகள் தொடர்பாக தேடப்பட்டுவரும் தனது இரு புதல்வர்களும் வீடு திரும்புகின்றபோது அவர்களை உடனடியாகப் பொலிசாரிடம் கையளிப்பேன் என முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டுவரும் ரத்வத்தையின் புதல்வர்களான லொகான் மற்றும் சானுகா ஆகியோர் தலைமறைவாகியுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை மேற்படிமுஸ்லிம் இளைஞர்களின் படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ஆயுதங்கள் தென்பகுதி இராணுவ முகாமொன்றில் இருந்து மீட்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# நாட்டில் அமைதிநிலை பெற பிரதேச ரீதியாக சமாதானக்குழு

## அமைப்பது தொடர்பாக ஆராய்வு

(கொழும்பு)

தொடரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும்விதத்தில் பிரதேசங்கள் தோறும் சமாதானக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக ஆராயப்படுவதாகவும் உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள்கலந்து கொண்ட கூட்டமொன்றில் இதனைத் தெரிவித்த உள்துறை அமைச்சர்,

தற்போதுநாட்டில்அதிகரித்துள்ள வன்செயல்களை கட்டுப்படுத்தி பூரண அமைதியை ஏற்படுத்த இச்சமாதானக் குழுக்கள் உதவும் என்றார்.

அத்துடன்சமாதானக்குழுக்கள் சீரான முறையில் இயங்குமிடத்து. சட்டவிரோத ஆயுதக் களைவில் பொலிஸார் நீதி சமத்துவத்துடன் செயற்படுதல் என்பன சாத்தியமாகும் எனவும் குறிப்பிட்டார். (உ)

# மீனவர்களை நோக்கி நேற்று துப்பாக்கிவேட்டு!

## சக்கோட்டைகடலில்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சக்கோட்டைக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது. கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

கடற்படையினரின்அனுமதி பெற்று, தொழிலில் ஈடுபட்ட போதும் மீனவர்கள் மீது இத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் அச்சத்துடன் கரைதிரும்பினர்.

இதேவேளை சக்கோட்டை திக்கம் பகுதியில் இருந்து தொண்டைமனாறு வரை, மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட தற்போதும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-43)

# காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என்.ஜீவேஸ்வரா இன்றுகாங்கேசனதுறை தடுப்புமுகாமுக்குச் செல்லவுள்ளார்;

அங்குதடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அவர்களின் உறவினர்களால் வழங்கப்படும் கடிதம் மற்றும் உடைகளை எடுத்துச் சென்று ஒப்படைப்பதுடன் கைதிகளால் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களையும் இவர் எடுத்துவருவார். (உ-19)

## இன்று ஒரு தகவல்

# தாலக்கனி ஒன்றுக்காய்

யாழ்ப்பாணத்துக் கனிகளில் பிரபல்யம் வாய்ந்த தொன்றாகத்தொன்றுதொட்டுக்கூறப்படும்தாலக்கனி எனப்படும் பனம் பழமும் ஒன்று.

இதன்சிறப்பைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பெருமையுடன் சுட்டிநிற்பதுடன் போஷாக்கு மிக்க சத்துணவாகவும் கூறப்பட்டுள்ளது. இன்று ஆரம்பக் கல்விப் பாட விதானத்திலும் கூட இதை நினைவுபடுத்தத் தமிழ்ப்பாடத்தில் 'கொண்டாடினான் ஒடியற்கூழ்' என்ற தலைப்பில் மெல்லச் செத்துக்கொண்டிருக்கும் கூழின் பெருமை விதந்துரைக்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தம் சுட்டிநிற்கும் செயற்பாட்டுக்கல்வியில் இளம் ஆசிரியர்கள் சில முதியோர்களின் உதவியுடன் கூழ்காய்ச்சி வழங்கும்போதுதான் இளம் சிறார்கட்கு இதன்சுவை தெரியும்; இவர்களின் உந்தலால் வீட்டாருக்கும் கூழின் ஞாபகம் வரும். பல நோய்களுக்கு மருந்தாக அன்று கருதப்பட்ட கூழின் பெருமையை மழுங்கடிக்கச் செய்வதில் ஆங்கில வைத்தியத்தின் வளர்ச்சியும், நாகரிகமும் குறிப்பிடத்தக்கது.

ஆடி தொடக்கம் ஐப்பசிவரை 'தொப்பி கழண்டவர் தொப்பென விழுவார்,. ஒரு தசாப்தத்துக்குமுன் கற்பகதருவான பனையின் பெறுமதியும், மதிப்பும் புத்துயிர் பெற்றன. இக்காலத்தில் பனை உரிமையாளரின் கவனமும் காணியிலேயே இருந்தது. உடுப்பைச் சலவை செய்வதற்குச் சவர்க்காரத்தின் பிரதியீடாக இது அமைந்தது. அக்காலம் தொட்டு இன்றுவரை பனம்பழச் சண்டைகள் இடம்பெறுவதையும் அவை கத்தி வெட்டில் முடிவடைவதையும் அறிந்துள்ளோம், அறிகின்றோம்.

பழந்தமிழ் இலக்கிய நூல்களிலொன்று 'கனகி புராணம்'. வண்ணார் பண்ணையில் வசித்துவந்த கனகி என்ற நடனமாதின் தவில் வித்துவானாக இருந்த நட்டுவச் சுப்பையனார் என்ற புலவரே இந்நூலின் ஆசிரியர். கனகி என்ற நடனமாது எல்லோராலும் கவரப்பட்ட ஒரு விலைமாதாகக் காணப்படுகிறாள். இவளிடம் யாழ்ப்பாணத்திலுள்ள பல ஊர்களிலிருந்தும் நிலச்சுவாந்தர்கள் மாட்டு வண்டில் நிறையப் பொருட்களுடன் வந்து செல்வதுண்டு. அவ்வாறு வருபவர்களை நேர்கண்டு கனகிக்கு அறிவித்துக் கனகி உடன்பட்டால் அழைத்துச் செல்பவளாகத் தோழி சித்திரிக்கப்பட்டுள்ளாள். இவ்வாறாக ஒருநாள் நியூட்டன் என்ற ஒருவன் வண்டிநிறையப் பனம் பண்டங்களுடன் வருகிறான். தோழி அவனை நேர்கண்டு கனகிக்கு இவ்வாறாகக் கூறுவதாகப் புலவர் தாலக்கனியொன்றுக்காய் என்ற பாடல் மூலம் தருகிறார். அதாவது பெண்ணே தாலக்கனியொன்றுக்காக வேல், சத்தி, வாள் போன்ற பல கூரிய ஆயுதங்கள் கொண்டு சண்டையிடுகின்ற ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த தலைவனான நியூட்டன் என்பவன் வண்டி நிறையப் பனம் பண்டங்களுடன் உன்னிடம் வந்துள்ளான்; அவனை உள்ளே அனுமதிக்கலாமா என்று கேட்கிறாள்.

இத்தகைய பெறுமதி வாய்ந்த பனம்பழச் சண்டை இன்றல்ல பல நூற்றாண்டுகட்கு முன்பும் கூடச் செல்வாக்குச் செலுத்தியமை ஆவணப்படுத்தப்பட்டு பழந்தமிழ் இலக்கியங்களில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதுவே போராட்டம் வளர்ச்சியடைய முன் தென்னிலங்கையில் எம்மவர்களின் சின்னமாக தாலக்கனியின் விதை அமைந்திருந்ததையும் மறக்க முடியாது. மேதகு பெறுமதி வாய்ந்த தாலக் கனிக்காகச் சண்டையிடாமல் ஒற்றுமையாக வாழ்வது வரவேற்கத்தக்கதே.

மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்.

## யாழ்-தெல்லிப்பழை

# சிற்றூர்திச் சேவை நடத்துவதில் சிரமம்

(ஏழாலை)

யாழ்ப்பாணம்-தெல்லிப்பழை 769ஆம் இலக்க சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள் சிறந்த முறையில் போக்குவரத்து சேவையினை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சிற்றூர்தி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளுக்கு அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவு சங்க எரிபொருள் விற்பனை நிலையம் ஊடாக ஒரு நாளைக்கு 10 லீற்றர் டீசல் வழங்கப்படுவதாகவும் இது போதுமானதாக இல்லை எனவும் ஆகக் குறைந்தது 20லீற்றர் டீசலாவது வழங்கப்படும் பட்சத்திலேயே தமது சேவையினைத் தடங்கலின்றி நடத்தமுடியுமெனவும் சிற்றூர்தி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (உ-12)

## கிராமசேவகர் நியமனம் பெற்ற

# சமுர்த்தி அலுவலர்களின் நியமனங்கள் ரத்து

(கொழும்பு)

கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்ட 5 ஆயிரம் சமுர்த்தி அலுவலர்களின் நியமனங்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அலுக்அலுவிஹார ரத்துச்செய்துள்ளார்.

அவைகள் அரசியல் நியமனங்கள் என அவர் தெரிவித்துடன், சமுர்த்தியுடன் தொடர்புபட்ட விவகாரங்களை சுத்தப்படுத்தி சீராக்கும் திட்டத்தின் முதற்படி இதுவாகும் என்று ஒரு அதிகாரி தெரிவித்தார்.

மாகாண சபைகள் அமைச்சராகவுமுள்ள இவர், வட மத்திய மாகாண சபைக்கு புதிய அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தத்தையும் ரத்துச்செய்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவினால் நிர்மாணிக்கப்பட்டுபின்னர் பராமரிக்கப்படாது கைவிடப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரங்களை திருத்தியமைக்குமாறும் உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். (உ)

# தமிழர் விடுதலைக் கூட்டணி மீது ரெலோ ஸ்ரீகாந்தா பாய்ச்சல்

## தம்மீது மாசு கற்பிக்க சிலர் முயல்கின்றனராம்

(கொழும்பு)

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணி ஆகிய இரண்டும் இரத்தக் கறை படிந்த ஆயுதக் குழுக்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக ரெலோ இயக்க முதல்வர் என் ஸ்ரீகாந்தா விசனம் வெளியிட்டுள்ளார்.

இது விடயத்தை கடந்த வியாழனன்று தமிழ்க் கட்சி கூட்டமைப்பு நடவடிக்கைக் குழு கூடியபோது சுட்டிக்காட்டியுள்ள ஸ்ரீகாந்தா,

இவ்வாறு தமக்கெதிராக களங்கம் கற்பிக்கும் விதத்தில் செயற்படுபவர்கள் யார் என்பது தமக்குத் தெரியும் எனவும்,

இத்தகைய செயற்பாடுகளை இனியும் தம்மால் சகித்துக் கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இவ்வாறான முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபடுவார்களேயானால் பெயர்களைக் குறிப்பிட்டு இவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளைத் தமிழினத்திற்கு அம்பலப்படுத்த வேண்டிவரும் என்றும்,

அதுமட்டுமன்றி கூட்டமைப்பின் நலன்கருதி இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியையும் வற்புறுத்த வேண்டி ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (உ)

# அகண்டநாம பஜனை

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் எதிர்வரும் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டி, காலை 7-15 முதல் மாலை 5-30 மணி வரை அகண்டநாம பஜனை நடைபெறவுள்ளது. (உ)

# ஒளிவிழா

(காரைநகர்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்திவரும் நத்தார் ஒளி விழாவும் கலைநிகழ்வுகளும் எதிர்வரும் 28 ஆம் திகதிமன்ற அரங்கில் நடைபெறவுள்ளன.

கலை நிகழ்வுகள் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் நத்தார் தினத்தை முன்னிட்டு திருமறைக் கலா மன்றம் நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களிற்கான பரிசில்களும் மேற்படி விழாவில் வழங்கப்படும். (எ-226)

# கலைவிழா

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடாத்தும் முன்பள்ளி சிறார்களின் கலைவிழா இன்று காலை 8.30 மணிக்கு வலி. தென்மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவி செல்வி செ. பஞ்சரத்தினம் தலைமையில் மானிப்பாய் பிரதேச சபை 'ரவீந்திரன்' கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனும் கௌரவ விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ரி. வி கிருஷ்ணசாமி, பிரதேச செயலர் ந. தேவநாயகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-232)

# பரிசளிப்பு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தையொட்டி சைவ பரிபாலன சபை நடத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இம்மாதம் குருபூசை தினத்தன்று நடைபெறும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இப் பரிசளிப்பு நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றைய தினம் நடைபெறமாட்டாதென்றும், அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி புண்ணிய நாச்சியம்மையார் தினத்தில் நடைபெறும் என்றும் மேற்படி சபை தெரிவித்துள்ளது. (எ)

## கொழும்பு மாநகரில்

# தங்கு தடையற்ற வாகனப் போக்குவரத்து

(கொழும்பு)

கொழும்பு நகரிலிருந்து பெரும்பாலும் வீதித்தடைகள் ஏற்கனவே அகற்றப்பட்டுவிட்டன. கடந்த திங்கட்கிழமை கோட்டையில் சதாம் வீதிக்கு குறுக்கே போடப்பட்டிருந்த தடையும் அகற்றப்பட்டது

இனிமேல் வாகனப்போக்குவரத்து இவ் வீதியால் தங்கு தடையின்றி மேற்கொள்ளப்படமுடியும் என்று கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெராட் இக்னேஷியஸ் தெரிவித்தார்; கொழும்பு மத்தியதந்திக்கந்தோருக்கு முன்னதாகவுள்ள இந்த வீதி கடந்த 7 வருடங்களாக மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் பெரும்தொல்லையாகவிருந்த வாகனப் போக்குவரத்து நெருக்கடி ஓரளவுக்கு குறையும்நிலை தற்போது தோன்றியுள்ளது என்று போக்குவரத்துத் துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## நிவாரண அடிப்படையில்

# கோதுமை மா வழங்க இந்தியா இணக்கம்

(கொழும்பு)

மாதம் தோறும் 25 ஆயிரம் தொன்கோதுமை மாவை இலங்கைக்கு நிவாரண அடிப்படையில் வழங்குவதற்கு இந்தியா முன்வந்திருக்கின்றது.

இலங்கை அரசின வேண்டுகோளுக்கிணங்கவே இந் நிவாரணத்தை வழங்க முன்வந்துள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதவிர, கலாசாரம், விவசாயம், மின்சாரம் தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றை விருத்திசெய்யவும் இந்தியாவிருப்பங்கொண்டுள்ளது. (ந-4)

## கைதான கத்தோலிக்க

# இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்துவைத்துவிசாரணை

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாதோரால் சுடடுக் கொல்லப்பட்டதை அடுத்து, அப்பகுதி மக்கள் படையினரின் அச்சுறுத்தலுக்கும், பலத்த தாக்குதலுகளும் இலக்காகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்த 60 க்கும் மேற்பட்ட கத்தோலிக்க இளைஞர்கள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து, அங்கு இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இளைஞர்களை நத்தார் பண்டிகையை முன்னிட்டு விடுதலை செய்யுமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் 60 இளைஞர்களையும் நத்தார் கொண்டாடுவதற்கு உடன் விடுதலை செய்யுமாறு படைத்தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, பிஸ்டல் குழுவினரே பொலிஸ் கான்ஸ்டபிளை சுட்டுக் கொன்றதாக பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## சிந்தனைக்கு விருந்து

### தடிக்கும் தாலி கட்டுவர்

காசென்றால் செத்த கழிபிணமும் வாய்திறக்கும்
ஆசைக்கு வெட்கமில்லை அய்யையோ! - நீசர்சிலர்
வேட்டுமே சீதனத்தை வெற்றுத் தடியினுக்கும்
சூட்டுவரே தாலியினைத் தான்.

-பழையவன்

# இந்திய பாகிஸ்தான் எல்லையில் என்றுமில்லாதவாறு பதற்றம்

இந்திய பாகிஸ்தான் எல்லைப் புறங்களில் பதற்ற சூழ்நிலை நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து எல்லைப் புறப்படை வீரர்களுக்கும்மற்றும் கரையோர படையின ருக்குப் லீவுகள் ரத்து செய்யப் பட்டுள்ளன என்று இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் அடுத்த முதலாம் திகதி தொடக்கம் இராணுவத் தளபதி எஸ் பத்மநாதன் முப்படைகளின் தளபதியாக இருப்பாரென்று இராணுவச் செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

கப்பல் துறைத் தளபதி அட்மிரல் சுசில்குமார் ஓய்வு பெறுவதையடுத்து பத்மநாதன் அப்பதவியை ஏற்க இருக்கிறார். (து)

### பெத்தலஹேம் செல்ல

# அரபாத்திற்கு தடைவிதிப்பு றோ. க. திருச்சபை கண்டனம்

(ஜெருசலேம்)

கிறிஸ்தவர்களின் புனித இடமான பெத்தலஹேமிற்கு பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் செல்வதற்கு இஸ்ரேல் தடை விதித்திருப்பதற்கு றோமன் கத்தோலிக்கத்திருச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

அரபாத் மீதான தடை தன்னிச்சையானது என்றும், இத்தடையை இஸ்ரேல் நீக்க வேண்டும் என்றும் வத்திக்கான் வட்டாரங்கள் கேட்டுள்ளன.

இஸ்ரேலிற்கு பாதுகாப்பு குறித்த கவலைகள் இருக்கிறது என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் ஆனால், 95 இல் ஜெருசலேம் பலஸ்தீனரின் கட்டுப்பாட்டில் வந்ததில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் அரபாத் கலந்து கொள்ளும் இந் நிகழ்ச்சிகளில் இம்முறை ஏன் அவரைத்தடுக்க வேண்டும்என்றும் அங்கலிக்கன் திருச்சபை பேராயர் இது தொடர்பாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் மாதம் இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் கொல்லப் பட்டதற்கு காரணமானவர்களை கைது செய்ததன் பின்னர் அரபாத் செல்ல அனுமதிக்கப்படுவார் என்றும் இஸ்ரேலிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க,கிறிஸ்து பிறப்பின் முதல்நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ள அரபாத்திற்கு இஸ்ரேல் தடை விதித்ததைத் தொடர்ந்து தான் கால்நடையாகவே பெத்தலஹேமிற்குச் செல்வதாக அரபாத் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

### அரசியல் சர்ச்சையின் விளைவு

# நைஜீரிய நீதித்துறை அமைச்சர் ஆயுதபாணிகளால் சுட்டுக்கொலை

(லாகூஸ்)

நைஜீரியாவின் நீதித்துறை அமைச்சரும் அரசின் தலைமை வழக்கறிஞருமான போலா ஐய்ட் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தென்மேற்கு நகரமான இபாடன்ட்டில் உள்ள தனது வீட்டில் இருந்த சமயம் வீட்டை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த இனந்தெரியாத ஆயுத பாணிகள் இவரைச் சுட்டுக்கொன்றிருப்பதாக கூறப்படுகிறது;

இவரது கொலைக்கான காரணம் எதுவென்று அறியப் படவில்லை யாயினும் அவர் உள்ளூரில் கடும் அரசியல் சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார் என்றும் இதற்கு முன்னர் இருந்த இராணுவ அரசாங்கங்களை வெளிப்படையாக குறைகூறியவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தைதொடர்ந்து உடனடியாக இராணுவ பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் கூட்டம்நடத்திய அதிபர் ஒபசன்யோ, தென் மேற்குப் பகுதிக்கு உடனடியாக இராணுவம் அனுப்பப் படுவதாகவும் அறிவித்துள்ளார்.

நைஜீரியாவில் அரசியல்வன்முறை கலாசாரத்தை அடியோடு ஒழிக்க உறுதிபூண்டுள்ளதாகவும் ஒபசன்யோ கூறி உள்ளார். (உ)

# மீன்பிடிப் படகில் போதைப் பொருள் மீட்பு

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவின் மேற்கு கடற்கரைப்பகுதியில் மீன்பிடிப்படகு ஒன்றிலிருந்து9.5 மெற்றிக்தொன் கொக்ஹெயின் போதைப்பொருளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சர்வதேச கடற் பரப்பில் சந்தேகத்திற்கிடமான முறையில்காணப்பட்ட இப் படகை கடற்படையினர் சோதனையிட்ட போதே போதைப் பொருள் கடத்தல் திட்டம் முறியடிக்கப்பட்டது.

இப் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரம வெளியிடப்படவில்லை.

சர்வதேசபோதைப்பொருள் கடத்தலின் முக்கிய மையமாக மெகசிக்கோ விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

### தேசத்துரோக குற்றத்தின் பேரில்

# இந்திய நாடாளுமன்ற ஊழியர் கைதானார்

(புதுடில்லி)

புதுடில்லி நாடாளுமன்ற ஊழியர் ஒருவர் தேசததுரோகத்துக்காகக் கைது செய்யப் பட்டுள்ளமை மிகவும்முக்கியமான விடயம் என்று மத்திய உள்துறை அமைச்சர் எல்கே அத்வானி தெரிவித்தார்.

பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்நத அதிகாரி ஒருவருக்குஇந்திய நாடாளுமன்ற ஊழியரான மேற்படி நபர், இரகசிய பாதுகாப்பு தகவல்களை வழங்கியதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மந்திரி தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளு மன்ற ஊழியரிடம் தகவல்களைப் பெற்ற பாகிஸ்தான் தூதரக அதிகாரி விசாரிக்கப் பட்டு வெளியேற உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது தெரிந்ததே. (து)

### ஆப்.பாதுகாப்புத்துறை

# இணை அமைச்சராக உஸ்பெக் இனத்தவர் நியமிப்பு

(காபூல்)

ஆப்கான் இடைக்கால அரசுத் தலைவர் ஹமீத் ஹர்சாய் உஸ்பெக் இன தனிப்படை தளபதி ஜெனரல் தோஸ் தம்மை ஆபகான் பாதுகாப்புத்துறை இணை அமைச்சராக நியமித்துள்ளார்.

முன்னதாக தனது இனக்குழுவிற்குஇடைக்கால அரசில் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்று கூறி புதிதாகஅமைக்கப்பட்ட இடைக்கால அரசிற்குஆதரவு தரமறுத்துவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தான் இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டிருப்பது ஆப்கானில் தேசிய இராணுவம் உருவாவதன் முதல் படி என்று தோஸ்தம் கூறி உள்ளார்.

இதேவேளை ஆப்கானில் பணியாற்றி வரும் சர்வதேச படைகள் எவ்வளவு காலம் ஆப்கானில் தங்கியிருக்க வேண்டும் என்பதில் ஆப்கான் தலைவர்களிடையே கருத்து வேற்றுமைகள் நிலவுவதாகவும் கூறப்படுகின்றது. (உ-2)

# ஆப்கான் புனரமைப்பு மகாநாடு

(காபூல்)

ஆப்கானின் புனரமைப்பு வேலைகள் தொடர்பாகஆராயும் மகாநாடு ஒன்று ஜப்பானின்டோக்கியோநகரிலநடைபெற்றது. இம் மகாநாடு ஜப்பானின் வெளியுறவு அமைச்சின் ஏற்பாட்டில் இரண்டு நாட்களாக நடைபெற்றது.

இதில் உலக வங்கி மற்றும் ஐக்கியநாடுகள் சபையின் பிரதிநிதிகள்கலந்துகொண்டனர். இவற்றின் அறிக்கைகளுக்கு ஏற்பவே புனரமைப்புத் திட்டம் வகுக்கப்படும் என்றும், இம்மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் பற்றிய முடிவு இம் மாத இறுதியில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-02)

### சமாதானப் படையை

# ஆப்கானுக்கு அனுப்புவது தொடர்பான மாநாடு

(லண்டன்)

ஆப்கானுக்கு சமாதானப் படையைஎந்த அடிப்படையில் அனுப்புவது என்பது குறித்து ஆராய16நாடுகளின் இராணுவ தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்றை நடத்த பிரிட்டன் திட்டமிட்டுள்ளது;

இம் மாநாட்டில் பிரான்ஸ், இத்தாலி, ஜோர்டான், துருக்கி ஆகிய நாடுகளின் இராணுவத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஆப்கானின் இடைக்கால அரசிற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் பிரிட்டன் கடற்படை வீரர்கள் அங்கு அனுப்பப்பட்டு அவர்கள்வடக்குகூட்டணிக்கு ஒத்துழைப்பும்வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# தலிபானின் பாக். தூதுவர் அங்கு தஞ்சம் புகுந்தார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானுக்கான முன்னாள் தலிபான் தூதுவர் முல்லா அப்துல்ஸலாமஸஜிக் பாகிஸ்தானில் தஞ்சம் கோரியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீதுஅமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து தலிபான்களின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது:

இந்த நிலையில் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனாலேயே பாகிஸ்தானில் தற்காலிகமாக புகலிடம்கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

# இந்தியப் படையினர் சுட்டுக் கொலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரின தெற்குப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 2 இந்தியப் படையினர், பாகிஸ்தான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும்.

இதன்போது மேலும் மூன்று படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்திய- பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான முறுகல் நிலை அதிகரித்துள்ள இந் நிலையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-5)

# லேடனைக் கொல்ல அமெரிக்கா புதிய யுக்தி

(வாஷிங்டன்)

ஆப்கானில் டோரோ போரோ மலைப்பகுதிகளைக் கைப்பற்றியஅமெரிக்கப்படைகள் அங்கு சல்லடை போட்டு தேடியும் ஒசாமா பின் லேடன் அகப்படாததால். குகைகள் நிறைந்த பகுதிகளை பாரிய குண்டுகள்மூலம தகர்த்து வரும் அமெரிக்கா, புதிய ரக லேசரால் இயக்கப் படும் 'நவீன உயர் வெப்ப' வெடி குண்டுகளைப் பயன் படுத்தவுள்ளது.

இக் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததும் பெரும் தீப் பிழம்புகளை உருவாக்குவதுடன், இத் தீப்பிழம்பு மேலும் எரியத் தேவையான ஒட்சிசனை சூழலில் இருந்தே பெறும்.

இதனால் அப் பகுதியில் ஒட்சிசன் பற்றாக் குறை ஏற்படுவதால் பிராணவாயு இன்றி அம் மலை குகைகளில் ஒழிந்திருப்பவர்கள் மூச்சுத் திணறிஇறக்க நேரிடும் என்று கூறப்படுகிறது.

இக் குண்டுகளைப் பயன் படுத்துவதன் மூலம், இம் மலைப் பகுதியில் ஒழிந்துள்ள அல்கெய்டா அமைப்பினரை கூண்டோடு அழிக்க முடியும் என்று அமெரிக்கா கருதுகின்றது.

இந் நவீன குண்டை அமெரிக்கா கடந்தவாரம் தான் சியாரா நெவாடா பாலைவனப்பகுதியில் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் கடந்த கால வரலாற்றிலும், தான் கண்டுபிடிக்கும் புதிய ஆயுதங்களை பரீட்சிக்க தனக்கு பகையான நாட்டினைப் பயன் படுத்துவதே வழக்கமாகவுள்ளது. அந் நிலைக்கு இப்போ ஆப்கானும் உள்ளாகி உள்ளது.

இதற்கு முன், ஈராக் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது நேச நாடுகளுக்கு கூட தெரியாமல் யுரேனியம் கலந்த குண்டுகளை போட்டிருந்ததும் இதனால் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வீரர்கள் பாரிய தாக்கங்களுக்கு உள்ளாகி இருந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது: (உ-2)

# மணிக் கோபுரம்

(அராலி)

வட்டுக்கோட்டை வடக்கு கலைநகர் வயிரவர் ஆலயத்திற்குமணிக்கோபுரம் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. (உ-214)

# ஒளிவிழா

(மானிப்பாய்)

வலிகாமம் வடக்குபிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினர் நடாத்தும் வருடாந்த ஒளிவிழா இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் வலி வடக்கு பிரதேச செயலர் திருமதி ப.இலகநாயகம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், குலமங்கைப் பங்குத்தந்தை அருட்திரு பா.பி.இராசலிங்கம் அடிகளாரின் நற்சிந்தனையும் அளவெட்டி தென்னிந்திய திருச்சபை போதகர் அருட்திரு. அசோக்குமார் அடிகளாரின் அருளுரையும் ஆராதனையும் இடம் பெறவுள்ளது. (உ-120)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி

- குறள்

# வலம்புரி

## ஒழுக்கம் காப்பது அவசியம்

யுத்தத்தின் விளைவுகளில் ஒன்று ஓர் இனத்தின் ஒழுக்க – கலாசார சீரழிவாகும். இடம்பெயர்வுகளும், அகதி முகாம் வாழ்க்கையும், புதிய உறவுகளின் அறிமுகங்களும் கலாசார சீரழிவை ஏற்படுத்திவிடுகின்றன.

இது ஒருபுறமிருக்க இடம்பெயர்வு காரணமாக பெற்றோர்களின் கண்காணிப்பும் குறைந்துவிட கட்டிளமைப் பருவத்தினர் ஒழுக்க வரம்பை மீறி விரசநடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

ஆபாச படங்கள் மதுச்சாலைகள் போதைவஸ்துக்கள் என்பவற்றின் உள்வருகை இளம்சந்ததிகளை நாசமாககி வருகிறது. இத்தகைய விரசமான போக்குகளை கேட்பாரும் இல்லை, பார்ப்பாருமில்லை என்ற நிலையில் அவற்றை வயதின் பெயரால் நியாயப்படுத்தவும் ஓர் குறிப்பிட்ட தரப்பினர் முனைகின்றனர்.

வாலிபப்பருவத்தில் ஒழுக்கம் காப்பாற்றப்படாவிடில அதன் விளைவை குடும்பம் - சமூகம் - நாடு என்றோ ஒரு நாள் அனுபவித்தே ஆகவேண்டும். தத்தம் பிள்ளைகளின் ஒழுக்க மீறல்களைக் கண்டும் காணாததுபோல அல்லது அதனை ஏதோ ஒருவகையில் நியாயப்படுத்தி நிறைவு கொள்வதெல்லாம் அழிவின் முடிவையே தரும்.

ஓர் நல்ல சமூகம் உருவாக வேண்டுமாயின், இளம்சந்ததியினரின் ஒழுக்கம் பேணப்படுவது மிகமிக அவசியமாகும். இளமைப் பருவத்தினரின் ஒழுக்கம் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதாக பெரியவர்கள் முன்மாதிரியாக நடக்க வேண்டும் - நடந்துகாட்ட வேண்டும். 'அவரே அப்படிச் செய்தாரெனில் நான் செய்வதில் என்ன தப்பு' என்று கேள்வி கேட்டு தமது தவறை-தப்பை நியாயப்படுத்த முற்படுகின்ற ஓர் சமூகம் உருவாகி வருகிறது. அத்தகைய சமூகத்தின் கேள்விகளுக்கு பெரியவர்களின் நடத்தைகள் நியாயம்கற்பிப்பதாக இருக்கக கூடாது.

ஒழுக்கம் தனித்துவமானது அங்கு ஒழுங்கீனத்திற்கு இடமில்லை எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் தனிப்பட்ட-சமூகஒழுக்கத்தில் கூடிய கவனமெடுக்க வேண்டும்.

# மாதங்கள் தோறும் வரும் இருபக்ஷ ஏகாதசி விரதங்களை அனுட்டித்துப் பேறு பெற்றோர்

மாருதி
ஆவரங்கால்

## இன்று சுவர்க்கவாயில் ஏகாதசி தினம்

மார்கழி மாதத்து பூருவ பஷ்சத்தில் வரும் ஏகாதசியையே முதலாகக் கொண்டு அனுட்டிக்கவேண்டும். ஆகலினால் அது ஆரம்ப ஏகாதசியெனவும் பெயர் பெறும் முற்காலத்தில் நாடிசங்கனின் மைந்தனான மரு என்னும் அசுரனுக்குத்தோற்றோடிய இந்திரன் திருமால் சமூகத்தில் சென்று முறையிட அவரது திருமேனியின்றும் ஓர்சக்தி பெண்ணாகத் தோன்றி அவ்வசுரனைக் கொன்று இந்திரனாதியர்களின் துன்பத்தைப் போக்கினாள் அதனால் அச்சக்தியானவள் ஏகாதசியென்னும் பெயருடையவளாய். அத்தினத்தைக் குயும் ஏகாதசியென நோற்பிக்கும் வரத்தையும் பெற்றாள்.

பற்றைய அபரக்ஷத்து ஏகாதசிக்கு மோக்ஷ ஏகாதசியென்று பெயர். இதனை கோகுலபுரத்து வைகானர் என்னும் இராசவிருடியனுட்டித்து முத்தியடைந்தான்.

### புத்திரதா ஏகாதசி

தைமாதத்தின் பூர்வபக்ஷத்தில் வரும் ஏகாதசிக்கு புத்திரதா ஏகாதசி யென்றுபெயர், இவ்வேகாதசியை பத்திவதிபுரக்கணிருந்த சுகேது என்னும் அரசனும்அவன் மனைவியாகிய சைப்பியா என்னும் அரசியும் அனுட்டித்துப் புத்திரப் பேறு பெற்றனர்.

### சபல ஏகாதசி

அபரபக்ஷத்து ஏகாதசிக்கு சபல ஏகாதசி யென்றுபெயர். இதனைச் சம்பகாவதி பட்டினத்து அரசகுமாரனா ஏசலன் அனுட்டித்து தத்துவஞானம் உணரப்பெற்றுமுத்தியடைந்தான்.

### சய ஏகாதசி

மாசிமாதத்திலே பூருவபக்கத்திலே வரும் ஏகாதசி சய ஏகாதசியெனப்படும். இதனை கந்தருவ குலத்து மாலியவானும் அவன் மனைவியான புட்பவதியும் அனுட்டித்து இந்திரனிட்ட சாபத்தலேற்பட்ட பிசாசு வடிவம் நீங்கப் பெற்றனர் அரக்கத்தில் வருஷ்டில ஏகாதசியை ஓம்பிராமண மங்கை நோற்று ஆட்ட சித்திகளை தனையும் பெற்றனள்.

### ஆமலக ஏகாதசி

பங்குனி மாதத்தில் வரும் பூர்வபக்கத்து ஏகாதசிக்கு ஆமலகஏகாதசியென்றுபெயர் வைதிச நாகத்தை சபித்துமன்னனும் சபந்திபுரத்து விதூரவேந்தனும நோற்று பலவித நற்பேறுகளையுமடைந்தனர். அபரபஷ்சத்துவிசய ஏகாதசியை ஸ்ரீஇராமச் சந்திரர் உபாசித்துஇராவணனைவதம் செய்து சீதாபிராட்டியையும் சிறைமீட்டு அயோத்தியை ஆண்டு வந்தார்.

### காமதா ஏகாதசி

சித்திரை மாதபூர்வ பஷ்சத்து காமதா ஏகாதசியை நாகலோகத்து லலிதன் என்னுமகாந்தருவன்அனுட்டித்து புண்டரீகன் என்னும அரசனிட்ட சாபத்தாலடைந்த இராக்கதருபம் மாறப் பெற்றான்; பாபமோசனம் என்னும் அபரபக்கத்துஏகாதசியை மஞ்சுட வென்னும தேவகன்னிகை யனுட்டித்து பாவங்கள் தொலையப் பெற்றாள்.

### மோகினி ஏகாதசி

வைகாசி பூர்வபக்கத்து மோகினி ஏகாதசியை துதிமன் என்னும் மன்னனும் திருட்டபுத்தி என்னும் வைசியனும் நோற்றுபரமபதமடைந்தனர் வருதினி என்னும் அபரபக்கத்து ஏகாதசியை அநேக மாபாதகர்களனுட்டித்து வைகுந்தபதமடைந்தனர்.

### பாண்டவ ஏகாதசி

பாண்டவர்களனுட்டித்து கண்ணபிரானையே தங்கள் துணையாகக் கொண்ட ஆனி மாதத்து பூர்வபக்கத்து ஏகாதசிக்கு பாண்டவ ஏகாதசி யென்னும் பெயராகும். அநேக மாயிரம் பாதகர்கள் அனுட்டித்து வைகுந்தபதமடைந்தது அபரா எனப்படும அபரபக்கத்து ஏகாதசியாகும்.

### பதும ஏகாதசி

ஆடி மாதத்து பூர்வபக்கத்து பதும ஏகாதசியை மாந்தாதா என்னும் சக்கரவர்த்தியனுட்டித்துமழை பெய்வித்து தேசவளம் செழித்து ஆட்சி புரிந்தான். குபேரனால் ஏற்பட்ட சாபம் நீங்கும் பொருட்டு இயக்கனாகிய ஏமமாலியும், அவன் மனையர்களாகிய விசாலாட்சியும், சுருபை யென்பவர்களும் அபரபக்கத்து வரும் யோகினி எனப்படும்ஏகாதசியை யனுட்டித்து சாபவிமோசனம் பெற்றனர்.

### நந்தன ஏகாதசி

ஆவணி மாதத்து பூர்வபக்கத்து நந்தன ஏகாதசியை மகிசித்து ராசன் என்பவன் அனுட்டித்து மகப்பேற்றையடைந்தான். புத்ரதா என்று மற்றொரு பெயரும் இதற்குள்ளது. காமிகா எனப்படும் அபரபக்கத்து ஏகாதசியை பஞ்சமாபாதகர் அனைவரும் ... தினம் பசியோடிருந்து உயிர் நீங்கிய படியால் பரமபதஞ்சேர்ந்தனர்.

### பத்மநாபா ஏகாதசி

விரோசனகுமாரனாகிய மகாபலிச்சக்கரவர்த்தியனுட்டித்து. இன்படைந்ததுவாமன எனப்படும்புரட்டாதிமாதத்து வளர்பிறைஏகாதசியாகும் சில நூல்களில்பத்மநாபா ஏகாதசி என்று மற்றுமொரு பெயருள்ளது. அரிச்சந்திரமகாராசனன் அனுட்டித்துஇராஜ்ஜியம் மீண்டது அபரஷ்சத்து அஜாஎனப்படும் ஏகாதசியாகும்.

தருமராசன் அனுட்டித்து தருமத்திற்கதிபதியாகியதுஐப்பசி மாசத்து பாசாங்குசஎனப்படும் வளர்பிறை ஏகாதசியெனப்படும் இந்திரா எனப்படும தேய்பிறை ஏகாதசியை இந்திரசேனன் அனுட்டித்துத் தன் தந்தைக்கு சுவர்க்கங் கொடுத்தான்.

அரிநாராயணமூர்த்தி அறிதுயில லொருவி யெழுந்திருப்பார், இதனில் யோகமுத்தியடைந்தோர் தொகையைப் புகலுதல்அரிதாகும் இப்பேர்ப்பட்ட கார்த்திகை மாசத்து பிரபோதினி யெனப் படும் வளர்பிறை ஏகாதசி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

சந்திரபாகையென்னும் இராசகுமாரியனுட்டித்துத் தன் காதலனையடைந்தது இரமாஎனபபடும் தேய்பிறை ஏகாதசியிலாகும்.

மேலதிகமாக சில மாதங்களில்வரும்ஏகாதசிகளுக்குபரம ஏகாதசி, பதுமினி யேகாதசி, கௌசிக ஏகாதசி கைசிகவேகாதசி சர்வேசிவேகாதசி தத்தவேகாதசி எனப்பெயர் கொள்ளப்படுகின்றது.

சிலமாதங்களில் வரும்மேலதிமான ஏகாதசிக்கு கமலா ஏகாதசியெனவும் சில நூல்களில் காணப்படுகின்றது.

நன்றி;
பொருளகராதி.

# ஏட்டுச் சுவடியில் இருக்கும் போது உறங்குகின்ற சங்கதிகள் அச்சுரு பெறுமிடத்து சமூகத்தில் பேசும் சக்தி பெறுகின்றன

## கலாநிதி எஸ். சிவலிங்கராசா உரை

(யாழ்ப்பாணம்)

'ஓலையிலும் ஏட்டுச்சுவடியிலும இருக்கும் போதுஉறங்குகின்ற சங்கதிகள் பல அச்சுவாகனம் ஏறும் போதுசமூகத்தைபார்த்து பேசதொடங்குகின்றன.'

யாழ். மாவட்ட சிகைஒப்பனையாளர் சங்கம் நடத்திய பிரபல எழுத்தாளர் தேவிபரமலிங்கம் எழுதிய 'அணி திரளும் சிறு அலைகள்' நாவல் நூல் வெளியீட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்ட உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா இவ்வாறு தெரிவித்தார்.



நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில், யாழ்மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத் தலைவர் சி. அ. சிவலிங்கம் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இவ் விழாவில் கலாநிதி சிவலிங்கராசா தொடர்ந்துஉரையாற்றுகையில் கூறியதாவது;

ஓலைகள் ஏட்டுச் சுவடிகளில் இருந்த பல நல்ல செய்திகள் அழிந்துவிட்டன. அல்லது அழிக்கப்பட்டன.

ஆனால் அச்சு வசனம் ஏறிய பலநூல்கள் இன்றும் காப்பாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

தேவிபரமலிங்கம் 25 வருடங்களின் முன்எழுதியநாவல் இன்று வெளிவருகின்றது. அவர் தான் சார்ந்த சமூகத்தின் அன்றைய வாழ்நிலையை இந் நாவல் மூலம் படம்பிடித்துக் காட்டியுள்ளார்;

19 ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியம் புதிய-வேகம் பெற்றது. அப்போது பல கனவான்கள் ஈழத்து இலக்கிய வளத்திற்கு பேருதவி புரிந்தார்கள்.

அன்று வெளியான நூல்களை ஆய்வு செய்தால் அந்நூல் வெளிவருவதற்குப் பண உதவிபுரிந்தவர்களின்பெயர்ப்பட்டியல் அங்கே சேர்க்கப்பட்டிருக்கும். அந்தமரபு இன்றும் தொடர்கிறது. இலை மறை காயாக உள்ள எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளிவருவதற்கு இன்று பல அமைப்புகள் முன்வருவது பாராட்டுக்குரியது' என்றார்.

கலாநிதி க. குணராசா

(6-ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### பரத்தினைப் பார்

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு.


திருக்குறள்

இருப்பவர் பரம்பொருள் ஒருவரே. யாண்டும் அவரையே கண்டு, அவரோடு களித்திருப்பாய் மனமே

கயிற்றைப் பாம்பெனக் கருதி மனிதன் படாத பாடுபடுகிறான். அப்படித் தான் படும் வேதனைகளெல்லாம் தனது அஞ்ஞானமே காரணமாகும். பரம்பொருளைப் பிரபஞ்சமெனக் கருதி மனிதன் அல்லல் மிகப் படுகிறான். பரமனை உள்ளபடி காண்பது மெய்யறிவு.

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

### 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முத்துக்கிருஸ்ணர் அற்புததேவன்
அவர்களின் 50 ஆவது அகவை நிறைவையிட்டு
எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துககொள்கின்றோம்.

**ஆயிரம் பிறை கண்டு வாழி**

*அகவை ஐம்பது கண்டாய்!*
*அற்புத தேவனே வாழி!*
*மாயவன் மைந்தாவாழி!*
*மதிநுட்பம் மிக்காய் வாழி!*
*அச்சு இயந்திரத்தில்*
*அசையாத முத்திரை பதித்த*
*அண்ணலே அற்புதத் தேவனே*
*ஆயிரம் பிறை கண்டு வாழி!*

வலம்புரிக்குடும்பம்

**புலிகள்** அமைச்சர் எல்.கே. அத்வானி, வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோரையும் சந்தித்து இனப பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் பெறுமதியான பங்களிப்பை கோரி யுள்ளார.

பிரதமர் ரணில் நாடு திரும்பமுன் இறுதியாக பிரதமர் வாஜ்பாயை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார் இப்பேச்சுக்களின் முழுமையான விபரங்கள் மிகவும் இரகசியமான முறையில் வைக்கப் பட்டுள்ளதுடன் பேச்சின் எந்தவொரு அம்சமும் வெளியிடப்படவில்லை எனினும் விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்குவதற்கு இந்தியப்பிரதமர் வாஜ்பாய சம்மதம் தெரிவிக்க வில்லை என அரசியல் ஆய்வாளர்கள் பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளனர்.

இதனை உறுதிப்படுத்துவதாக சமாதானப் பேச்சிற்கு முக்கிய தடைக் கல்லாக இருக்கும் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஜ்பாயுடன் நடத்திய பேச்சு வார்த்தையின பின் செய்தியாளர் மத்தியில் பேசுகையில், புலிகளின் தடையை நீக்குவதற்கு உகந்த சூழ்நிலை அரசுக்கு ஏற்படவில்லையென்று கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியதாகும். (வ)

**திருமலையில்.** மருதோதையன்தோட்டம் மற்றும் தம்பலகாமத்தில் சில பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்படடிருப்பதாக, அப்பகுதியில் உள்ள நெல்வயல்களில் மழைநீர் தேங்கி நிற்பதனால் அவை பாதிப்பட்டுள்ளதாகவும் தெரிகிறத.

# வடக்குக் கிழக்கில் மூடிக்கிடக்கும் 178 பாடசாலைகள் திறக்கப்படும்

(கொழும்பு)

இதுவரை காலமும் வடக்குகிழக்கு மாகாணங்களில் மூடப்பட்டிருந்த 178 பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மாணித்துள்ளது.

மூடப்பட்ட பாடசாலைகளில் மாணவர்களது கல்வி நிலையையும் அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் விடுத்த கோரிக்கைகளையும் அடுத்தே இப்பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

வடக்குகிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 85 பாடசாலைகளும் மன்னார் மாவட்டத்தில் 21 பாடசாலைகளும் கிளிநொச்சி மாவட்டதில் 21 பாடசாலைகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் மூடப்படடிருந்தன.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் திருமலையில் 13 பாடசாலைகளும் அம்பாறைமாவடத்தில் 04 பாடசாலைகளும் தற்போது பாவிக்க முடியாத அளவுக்கு கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது. (வ)

# கடவுளின் பெயரை மரணங்களுக்கு இழக்காதீர்!

## நத்தார் ஆராதனையில் பாப்பரசர்



(ரோம்)

யுத்தம், பதற்றம் காரணமாக மனித உள்ளங்கள் கவலையடைந்திருந்தாலும் தம் யேசுகிறிஸ்த்து நாதரின் சமாதான செய்தி இன்னமும் பெறுமதி வாய்ந்தவொரு செய்தி ஆகும் என்று பாப்பரசர் இரண்டாம் அருளப்பார் சின்னப்பர் நத்தார் ஆராதனையின்போது தெரிவித்துள்ளார்.

வத்திக்கான் தேவாலயத்தில் நத்தார் ஆராதனை நேற்று இடம் பெற்றது. 81வயதான பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கான் நகரில் உள்ள சென்பீற்றஸ் தேவாலாத்தில் நேற்று நள்ளிரவு நத்தார் ஆராதனைகளை நடத்தினார்.

அவ்வாராதனையின் போது, கடவுளின் பெயரை மரணங்களுக்கும் பயன்படுத்தாது இருக்கும் வகையில் சாத்தியமான அனைத்தையும் செய்யுமாறு கிறிஸ்தவர்கள், யூதர்கள், முஸ்ஸிம்கள் ஆகியோரைக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை நத்தார் ஆராதனைகளில் கலந்து கொள்வதற்காக பெத்தலகேம் சென்றுள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர்அரபாத் மீது இஸ்ரேல் விதித்துள்ள தடையை வத்திக்கான் கண்டித்துள்ளது.(வ)

## இலங்கை வங்கி

### அறிவித்தல்

வருட இறுதிக் கணக்குகளை முடிப்பதற்கு வசதியாக 31-12-2001 திங்கட்கிழமையன்று யாழ் மாவட்ட சகல இலங்கை வங்கிக்கிளைகளும் வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்களுக்காக காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை மட்டுமே திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

பிரதான முகாமையாளர்
யாழ்கிளை.

பிரதேசமுகாமையாளர்
யாழ்ப்பாணம்.

(C/3076)

# 3 ம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மலர்வு
பெற்றோர்
மகிழ

24 - 01 - 1948



உதிர்வு
மனைவி
மக்கள்
கதற

26 - 12 - 1998

**குடும்பத்தின் ஒளிவிளக்கு**

நல்லூரின் வீதியிலே புரட்சி நாயகனுக்கு
விழாவெடுத்த வேளையிலே
காவியமானீர்களே, வரலாற்றுத் தந்தையே!

ஏழை பங்காளனாய் எவர்க்கும் - உதவிய நீங்கள்
கோழையாகி விடாமல் கொள்கை வீரனானீர்கள்!
ஆளுமை திறன் கொண்ட நீங்கள்
சிரிப்போடு சிந்திக்கவும் வைத்தீர்கள்!

பாசமிகு தந்தையே பண்புமிகு அப்பாவே!
பரிதவிக்கவிட்டு பாதிவழியில்
எங்குதான் சென்றீர்கள் அப்பா

அகிம்சையின் வழியே வாழ்பவர்களுக்கு
கொடுக்கும் பரிசு இதுவா?
தமிழ்த் தலைவர்களுக்குக் கிடைக்கின்ற பரிசு
தமிழ் அரக்கனின் துப்பாக்கிச் சூடுதான் அப்பா!

கலைஞனாக மனிதாபிமானியாக
நயமான மேடைப்பேச்சாளராக, எழுத்தாளராக
வள்ளலாக வச்சிர இதயங்கொண்டு
தன்னைச் சந்திக்கும் இடர்ப்பாடுகளையும்
சோதனைகளையும் சாதனையாக்கினீர்கள்

ஏழை, எளிய மக்களிற்கு உதவினீர்கள்- தன்
பிள்ளைகள், தன் குடும்பம் என்றுபார்க்காமல்
மக்கள்! மக்கள் என்று மக்களுக்கே பாடுபட்டீர்கள்
இன்று நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த
காளான்கள் இல்லையப்பா- நீங்கள்
நெருப்பாற்றில் நீந்தி வந்த மெழுகுவர்த்தித் தீபம்
-அப்பா நீங்கள்

அப்பா உங்கள் பணியை காலன் என்னும்
கொடிய அரக்கன் இடையில் கத்தரித்து விட்டான் அப்பா!

*தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை''

*''என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''

*''நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும்
இங்கு தீமைகள் நுழைந்து விடக் கூடாது''
- எம்.ஜி.ஆர்

*''கடல் நீர் ஏன் உப்பானது கடல் கடந்து
வாழ்கின்ற தமிழர்கள் வடிக்கின்ற கண்ணீரால்''
- பேறிஞர் அண்ணா

மக்கள் திலகம் எம்ஜிஆர் நிகழ்வின் இடைவேளையில் !
நல்லூரின் வீதியிலே பேசிக்கொண்டிருந்த அப்பாவிற்கு
மாயமாகவே வந்த எங்கள் குலவிளக்கின்
தலையிலே நாலுரவைகள் துளைத்ததுவோ.
பிஸ்டல் எனும் கொடிய நஞ்சே குருதியிலே தோய்ந்தாரே
எங்கள் இதயக்கனி மறைந்தாரோ

நல்லவர்கள் வாழ்வதில்லை இது நானிலத்தின் தீர்ப்பு

அணைந்து விட்ட எங்கள் குலவிளக்கை இன்னும் நினைப்போம்
என்று வானத்து சந்திரனே இவ்வையகத்தில் உலாவிய
எம் மாசற்ற அப்பாவைஎப்போ காண்போம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஈழமண்ணிலிருந்து வணங்குகின்றோம்.
உங்கள் பணி தொடரும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

முன்னாள் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட செயலாளர் நாயகமும் (T.U.L.F), அகில இலங்கைச் சமாதான நீதிவானும் (J.P) திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும், வடபிராந்திய மினிபஸ்சங்கத்தலைவருமாகிய

அமரர் உயர்திரு.

## பொன்னுத்துரை மதிமுகராசா(மதி)

(திதி 26-12-2001 புதன் கிழமை)

| | |
|---|---|
| மனைவி | - மதிமுகராசா விஜயலட்சுமி |
| மகள் | - விஜயமதி, கஸ்தூரிமதி |
| மகன் | - விஜயகாந்த் (விஜய்) (அனைத்துலக எம்.ஜி.ஆர். இளைஞர் அணித்தலைவர்) -விஜயவர்மன் (வர்மன்) (உரிமையாளர் விஜய் வீடியோ சென்ரர்) |

ஸ்ரீமுருக பவனம் ,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

விஜய் வீடியோ சென்ரர்,
போட்டோ அன் வீடியோ
தாவடி,
கொக்குவில்.

(4109)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2001ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.